விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 27 திங்கட்கிழமை (09.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173




# யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தடையினால் 17 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

## கடற்றொழிலாளர் சங்கம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் மீன்பிடித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 17 ஆயிரம் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்பின்றி சிரமப்படுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் லண்டன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## போதியளவு நிதி வசதிகள் இல்லாமையால் உலக உணவுத் திட்டத்தின் பணி பாதிப்பு

### இலங்கைப் பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட களுத்துறை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் காலி மாவட்டங்களில் நிவாரணப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு உதவி வழங்கும் நாடுகள் நிதியுதவி வழங்க வேண்டும் என உலக உணவுத் திட்டம் கோரிக்கை விடுத்துள்ளது.

போதியளவு நிதியுதவி இன்மையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜேன் வைவ்ஸ் தெரிவித்துள்ளார்.

போதியளவு நிதியுதவியின்றி நாங்கள் செயற்பட்டு வரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்சவுக்கு கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கு ஜே.வி.பியின் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக சிலுமின ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தக் கொலை அச்சுறுத்தலை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைப் பாதுகாப்பதற்காக நான்கு பாதுகாப்புக் குழுக்கள்

### தேசிய சுதந்திர முன்னணி ஆலோசனை

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நான்கு பாதுகாப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் எனத் தேசிய சுதந்திர முன்னணி, அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பது அவசியம் எனக் குறிப்பிட்டிருக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச,

எனினும் வடக்கில் பாதுகாப்புப் படையினர் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படக் கூடாது எனக் கூறியுள்ளார்.

வடக்கைக் கைப்பற்றும் நோக்கில் பாதுகாப்புப் படையினர் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள முடியாத விடுதலைப்புலிகள் அங்கிருக்கும் இராணுவத்தினரைத் தென்பகுதிக்கு வரவழைக்கும் நோக்கில் கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதியில் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

இதனைத் தடுப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம் மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல்

(சிலாபம்)

சிலாபம் ஆராச்சிக்கட்டுவப் பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினால் நேற்றுக் காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்குள் புகுந்த அடையாளம் காணப்படாத கும்பல் ஒன்று அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தின் போது மூன்று வாகனங்களில் வந்த சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

## கொழும்புப் பயணங்களைத் தவிர்க்குமாறு வட.-கிழக்கு தமிழர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குத் தமிழர்கள் கொழும்புக்குப் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மேலக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் தெற்குப் பிரதேசம் தமிழர்களுக்குப் பாதுகாப்பற்றதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமீப காலமாக இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்களினால் வடக்குக் கிழக்கிலிருந்து தெற்கிற்குப் பயணம் செய்யும் அனைத்துத் தமிழர்களும் சந்தேகக் கண்களோடு நோக்கப்படுகின்றனர்.

இந்த நிலைமை தமிழர்களுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும் என ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குக் கிழக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த லண்டன் பயணம்

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை லண்டன் பயணமானார்.

இந்த மாநாடு லண்டனிலுள்ள பொதுநலவாய நாடுகளின் செயலாளர் காரியாலயத்தில் இன்றும் நாளையும் நடைபெறும். இந்த மாநாட்டிற்கு இலங்கையின் சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தூதுக் குழுவினர் சென்றுள்ளனர்.

மாநாட்டில் அமைப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட இராஜதந்திரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## வடக்கு மக்கள் தெற்குக்குச் செல்ல அரசாங்கத்தினால் தடை விதிப்பு

### ஐ.தே.க. கண்டனம்; கூட்டமைப்பு விசனம்

(கொழும்பு)

வடபகுதி மக்கள் தென்பகுதிக்கு வருவதற்கு மதவாச்சியில் தடை விதிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். மதவாச்சியூடான போக்குவரத்துக்குத் தடை விதிப்பதன் மூலம் நாட்டைப் பாதுகாக்க முடியாதென்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மொறட்டுவ , கட்டுப்பெத்தவிலும் கண்டியிலும் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களையடுத்து வட பகுதியிலிருந்து மதவாச்சிச் சோதனைச் சாவடியூடாகத் தென் பகுதிக்கு மக்கள் வருவது கடந்த இரு தினங்களாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடை குறித்துக் கேட்டபோதே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினாலேயே மக்களின் சுதந்திரமும் உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. சுதந்திரமான போக்குவரத்துக்கு தடை விதிக்கும் ஒரே அரசாங்கம் தற்போதைய அரசாங்கமேயாகும்.

நாட்டுக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு வைத்தியசாலைக் கட்டடங்கள் இவ்வருடம் திறந்து வைக்கப்படும்

## வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் திணைக்களீத்திற்குட்பட்ட நான்கு வைத்தியசாலைகள் இவ்வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்படுமென யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, அச்சுவேலி, மானிப்பாய் மற்றும் பருத்தித்துறை மத்திய மருந்தகம் ஆகிய நான்கு வைத்தியசாலைகளுமே இவ்வருட இறுதிக்குள் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்படுமென அவர் கூறினார்.

அத்துடன் கரவெட்டி வைத்தியசாலை கட்டட வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போதாது என்பதால் அவ் வைத்தியசாலை அடுத்தவருடம் முற்பகுதியிலேயே வேலைகள் முடிபுற்று திறந்து வைக்கப்படுமெனவும் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

(ச-5)

# வடமாகாண தபால் திணைக்களம் 147 மில். ரூபா வருமானம் பெறவேண்டும்

## அஞ்சல் மா அதிபர் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தபால் திணைக்களம் 2008 ஆம் ஆண்டு 147 மில்லியன் ரூபாயை வருமானமாக காண்பிக்க வேண்டுமென அஞ்சல்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளதாக வடவலய பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வடமாகாணத்தைச் சேர்ந்த சகல அஞ்சல் அதிபர்களுக்கும் இது குறித்து தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்ட வடவலய பிரதி அஞ்சல் மா அதிபர், விடேச கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக தபால் திணைக்களம் நட்டமடைந்து வருவதால் தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் ஆலோசனையுடன் அஞ்சல் மா அதிபரினால் ஒவ்வொரு மாகாண தபால் திணைக்களங்களுக்கும் இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# ஜொலிஸ்ரார் கிண்ணத்தை கே.சி.சி.சி சுவீகரித்தது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழக அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று ஜொலிஸ்ரார் கிண்ணத்தை சுவீகரித்தது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் இ.ச.பேரம்பலம் அன் கோ அனுசரணையுடன் நடத்திய ஜொலிஸ்ரார் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் துடுப்பாட்டப் போட்டித் தொடர் கடந்த ஒரு மாதகாலமாக யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இத் தொடரில் இறுதிப்போட்டிக்குள் நுழைந்த யாழ்.பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகமும் நேற்று மோதின.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பற்றீசியன் விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் ஜக்சன் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் சுஜீபன் 19 ஓட்டங்களையும் மற்றும் ஜெனன்ராஜ் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எஸ்.உமாநாத் 8 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 3 விக்கெட்டுக்களையும் வல்லவக்குமரன் 2 விக்கெட்டுக்களையும் றொபேசன், நதீஸ்வரன், பிரதாபன் மற்றும் ஐங்கரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 30 ஓவர்களில் 142 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 23 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 143 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஜொலிஸ்ரார் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதில் கே.சசிகரன் 2 ஆறு ஓட்டங்கள் உட்பட 61 ஓட்டங்களையும் இ.ஐங்கரன் 6 நான்கு ஓட்டங்கள் உட்பட 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் லவதீசன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(ச-3,5)



யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவியுயர்வு பெற்றுள்ள யாழ்.மாவட்ட முன்னாள் நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதை படத்தில் காணலாம்.

# வயது முதிர்ந்த வெளிநாட்டவருக்கு விசேட வதிவிட விசா அறிமுகம்

(கொழும்பு)

நாட்டில் வசிக்க விரும்பும் வயது முதிர்ந்த வெளிநாட்டவர்களுக்காக விசேட வதிவிட விசாவொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய விசாத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு குடிவரவு குடியகல்வு ஆணையாளர் நாயகத்திற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

மேற்படி புதிய விசா நடைமுறை மூலம் வயது முதிர்ந்த வெளிநாட்டவர்கள் அதிகம் ஈர்க்கப்பட்டு இலங்கையில் வசிப்பதற்கு முன்வருவார்கள். அவர்களது சேமிப்பு தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்யும் வாய்ப்பு ஏற்படுமென குடிவரவு குடியகல்வு திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய விசா திட்டத்தின் கீழ் விசாக்களை புதுப்பிப்பதற்கான 6 மாத கால எல்லை 2 வருடமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் கீழ் வதிவிட விசாவுக்காக விண்ணப்பிக்கும் வயது முதிர்ந்த வெளிநாட்டவர்கள்15ஆயிரம் அமெரிக்க டொலர்களை அல்லது இதற்கு சமமான பெறுமதியுடைய பணத்தை அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளில் வைப்புச் செய்யவேண்டும்.

அத்தோடு ஒரு மாதத்துக்கான செலவாக ஆயிரத்து 500 டொலர்களையும் அவரில் தங்கி வாழ்வோரின் மாதாந்தச் செலவுக்காக 750 டொலர்களையும் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும். இத்திட்டமானது அடுத்த மாதம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இத்திட்டத்தை மீளாய்வு செய்து இதன் மூலம் வெளிநாட்டவர்களும் நன்மை அடைகிறார்களா என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்படுமென்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-5)

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

கரவெட்டி மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப.3 மணிக்கு வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை விவேகானந்தா விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

நாளை 10ஆம் திக்தி பி.ப 3 மணிக்கு குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது. (ச-52)

# 17-வது திருத்தம் தொடர்பான தெரிவுக்குழுவின் சிபார்சுகள் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

## ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

17-வது திருத்தச் சட்ட மூலத்தில் ஏற்படுத்தக் கூடிய மாற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது சிபாரிசுகளை விரைவில் முன்வைக்கும் என சக்தி வலுத்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

17-வது திருத்தச்சட்டமூலத்தில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அதனை நிவர்த்தி செய்யக்கூடிய வழிவகைகள் குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கம், அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

17-வது திருத்தச் சட்டமூலத்தைப் பலப்படுத்தும் யோசனைத் திட்டங்கள் அடங்கிய அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் குணசேகர என்னிடம் கூறியிருந்தார் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

அரசியலமைப்பு விவகாரக் குழுவை ஜனாதிபதி நியமிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் அரசாங்கத்துக்குத் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

எனினும் 17-வது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னரே அரசியலமைப்புக் குழுவை நியமிக்க முடியுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறிவருகின்றார்.

இந்த நிலையிலேயே 17-வது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப உலக வங்கி கடனுதவி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்காக உலக வங்கி 75.6 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனாக வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த நிதி வடக்குக் கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளை மீளப் புனரமைப்பதற்காகவும் வறுமையான பிரதேசங்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தவும் கணக்காய்வாளர் திணைக்களம், குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகியவற்றின் முகாமைத்துவத்தை மேம்படுத்தவும் செலவிடப்படவுள்ளதாக உலக வங்கி விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் வீடுகளை மீளப்புனரமைப்பதற்காக 43 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு 13ஆயிரத்து 615 வீடுகள் மீள நிர்மாணிக்கப்படவுள்ளன.

அதேவேளை, போரினால் பாதிக்கப்பட்டுள்ள 34ஆயிரத்து 784 வீடுகளையும் 2 ஆயிரத்து 712 கிராமங்களையும் இந்நிதி மூலம் முற்றாகப் புனரமைக்கவுள்ளதாகவும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை இத் திட்டத்தின் மூலம் மீளக் குடியமர்த்த முடியும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுத்துறைச் சேவையின் இயலுமையைக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் கணக்காய்வாளர் திணைக்களம், குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் ஆகியவற்றின் நிருவாக மற்றும் நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்த 22.6 மில்லியன் டொலர்கள் செலவிடப்படவுள்ளன.

அத்துடன் 10 மில்லியன் டொலர்கள் கல்வித்துறையை மேம்படுத்துவதற்காகச் செலவிடப்படவுள்ளன.

குறிப்பாக இந் நிதியைக் கொண்டு வறுமையான மாணவர்களின் பொருளாதார ரீதியான எதிர்காலத்தை மேம்படுத்தவும் முரண்பாட்டுப் பிரதேசங்களில் வாழுகின்ற மாணவர்களை மொழி ரீதியாக இணைக்கவும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் எனவும் உலகவங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(அ-5)

# பருத்தித்துறை நீதிபதியாக அலெக்ஸ்ராஜா பதவியேற்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா இன்று பதவியேற்கிறார்.

பருத்தித்துறை மற்றும்மல்லாக நீதிமன்ற மேலதிக நீதிபதியாக கடமையாற்றிய இவர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் யாழ்.மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டதையடுத்து அவரின் இடத்திற்கு அலெக்ஸ்ராஜா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-52)

## இன்று ஒரு தகவல்

# தீயோர் !

“துஷ்டரைக் கண்டால் தூர விலகு!” என்று ஒரு பழமொழி உண்டு. எதற்காக இப்படி சொல்லிவைத்தார்கள்?

துஷ்டன் ஏதாவது தொந்தரவு கொடுப்பான்... அதனால் அவனைக்கண்டு பயந்து ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும்! என்ற அர்த்தத்தில் அல்ல!

ஒரு துஷ்டனிடம் நெருங்கிப் போகிறோம் என்றால் அவன் நமக்குக் கெடுதலான ஆலோசனைகள் சொல்லலாம்! அல்லது தீய உணர்வுகள் உள்ளவனாக இருக்கலாம். அல்லது தீய செயல்கள் செய்யக்கூடியவனாக இருக்கலாம். அல்லது தீய நட்பினால் அவன் ஏற்கனவே, கெட்டுபோனவனாகக்கூட இருக்கலாம்!

இப்படிப்பட்டவனை நெருங்கிப் போனால் அவனுடைய பாதிப்பு நமக்கும் வந்துவிடும்... அதனால் தான் விலகிப்போ என்று சொல்கிறார்கள். இதையே கொஞ்சம் விபரமாகப் பார்ப்போம்!

துஷ்டர்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார்கள். மகாபாரதத்தில் இந்த நான்கு வகையான தீயவர்களையும் காணலாம். முதல் வகைக்கு உதாரணம் – சகுனி!

இவன் மனதில் எப்பொழுதும் தீய எண்ணங்களே நிறைந்திருக்கும். கனவிலும் கூட தீய ஆலோசனைகளையே வகுப்பான்! யாராவது ஒருவர் நன்றாக வாழ்ந்தால் இவனால் சகித்துக்கொள்ள முடியாது! இப்படிப்பட்டவனுடைய நெருங்கிய தொடர்பு துரியோதனனுக்குக் கிடைத்தது...

துரியோதனன் எப்படிப்பட்டவன் என்றால்... அவன் தீய காரியங்கள் செய்வதற்கு தயங்காதவர். அப்படிப்பட்டவனுக்கு தீய ஆலோசனைகள் வழங்க சகுனி உதவினான்.

இவர்கள் இருவருடைய சகவாசமும் துச்சாதனனுக்குக் கிடைத்தது. அவன் தீய நடத்தையுள்ளவர். இந்த மூவரும் ஒன்று சேர்ந்தால் என்ன நடக்கும்? உலகமே கெட்டுப் போய்விடும். இந்த மூவருடனும் நல்லவன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவன் தான்... கர்ணன்.

கர்ணன்... இயல்பாகவே உத்தமகுணம் உள்ளவன். அவன் நல்லவர்களுடன் சேராமல் கெட்டவர்களுடன் வந்து நட்புக் கொண்டான். அதனால் அவனும் தீய செயல்களில் ஈடுபடவேண்டி ஏற்பட்டது!

துரியோதனனின் நண்பனாக அவனுடைய ஆதரவில் வளர்ந்ததால் அவனுக்குத் துணையாக இருக்க வேண்டியிருந்தது. நட்புரிமையால் உதவி செய்வதை தவறுஎன்று கூற முடியாது. இருந்தாலும் தீய செயல்களுக்கு உதவி புரிவது தவறு!

புத்தி பலம், புஜபலம் இருந்தால்கூட தெய்வபலம் இல்லையென்றால் ஜெயிக்கமுடியாது என்பது பெரியவர்களின் கருத்து! கர்ணன் மகாவீரன்! இருந்தாலும் கடைசியில் அவன் கதி? எல்லா நல்ல குணங்களிலிருந்தும் தீயவர்களின் சேர்க்கையால் அவனையும் தீயவனாகவே நினைத்தார்கள்.

அதாவது தீய ஆலோசனைக்கு சகுனி, தீய உணர்வுகளுக்கு துரியோதனன், தீய செய்கைக்கு துச்சாதனன், தீய நட்புக்கு கர்ணன் என்று சொல்லும் படி ஆயிற்றே! அதனால் தான் “துஷ்டரைக் கண்டால் தூரவிலகு” என்று சொன்னார்கள்!

இப்பொழுது நிலைமை மாறி இருக்கிறது! அன்று ஒரு நாள் காட்டுப் பாதையில் ஒருவன் அடிபட்டுக்கிடந்தான். அந்தவழியாக போன ஒருவர் அவனிடம் பரிதாபப்பட்டு போய்த்தூக்கி ஆறுதல் சொன்னார்.

“இந்த வழியால் ஒரு “ரவுடி” வருவோர், போவோரையெல்லாம் வழிப்பறி செய்வதாக கேள்விப்பட்டேன். இந்த வழியால் தனியாக வராதே” என்றார். “இனிமேல் அப்படிக் கேள்விப்பட மாட்டீர்கள்!” என்றான் அடிபட்ட ஆள், “ஏன்” என்று கேட்டார் இவர்.

“நான் தான் சார்... அந்த “ரவுடி”... இந்த வழியால் போனவர்களிடம் தகராறு செய்தேன். அவர்கள் தான் என்னை இப்படி அடித்துப் போட்டு... என்னிடமிருந்த பணத்தையும் பிடுங்கிக்கொண்டு போய் விட்டார்கள் சார்! காலம் ரொம்ப கெட்டுப்போய்விட்டது!” என்றான்–ரொம்ப பரிதாபமாக!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## மன்னாரில் எண்ணெய் ஆய்வை மேற்கொள்ள இந்திய நிறுவனத்துக்கு அனுமதி – அமைச்சர் பௌசி

(கொழும்பு)

மன்னாரின் கரையோரப் பகுதிகளில் எண்ணெய்வள ஆய்வை மேற்கொள்வதற்கான உரிமத்தை இந்தியாவின் கெயர்ன்ஸ் நிறுவனத்துக்கு வழங்கவுள்ளதாகவும் இதற்கான சகல ஏற்பாடுகளும் இம்மாதம் நிறைவடையுமென பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கெயர்ன்ஸ் நிறுவனத்துக்கு எண்ணெய் வாயுவள ஆய்வினை மேற்கொள்வதற்கு இடமளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜூன் 30 இல் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வருகை தருமாறு அந்த நிறு வனத்துக்கு நாம் அறிவித்துள் ளோம் என்றும் அமைச்சர் பௌசி கூறியுள்ளார்.

3ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்புடைய பகுதியில் ஆய்வை மேற்கொள்ள கெயார்ன்ஸ் நிறுவனம் 10 மில்லியன் டொலர்களை முதலீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார் வடிநிலப் பகுதியில் பல மில்லியன் பரல் மசகு எண்ணெய் படிவுகள் இருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலத்தில் 8 துண்டுகள் எண்ணெய் ஆய்வுக்கென அடையாளம் காணப் பட்டுள்ளன. இதில் முதலாவது பகுதியே இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது.

மன்னார் எண்யெய் ஆய்வுப் பணிக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப் பதாகவும் பணிகள் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ–5)

## தவிர்க்கக்கூடிய சுற்றுச்சூழல் காரணங்களால் வருடாந்தம் 13 மில்லியன் மக்கள் மரணம்

தவிர்க்கப்படக்கூடிய சுற்றுச் சூழல் காரணங்களால் ஒவ்வொரு வருடமும் 13 மில்லியன் மரணங்கள் இடம் பெறுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. உலக சுற்றுச் சூழல் தினத்தை யொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே உலக சுகாதார ஸ்தாபனம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் பலியாகும் 7 மில்லியன் சிறுவர்களை காப்பாற்ற வேண்டியது அவசியமென வலியுறுத்தியுள்ள உலக சுகாதார ஸ்தாபனம், இம்மரணங்களில் அநேகமானவை இந்தியா, சீனா, ஆபிரிக்கா சஹாரா பிராந்தியம் என்பற்றிலேயே இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

நோபல் பரிசுவென்ற காலநிலை மாற்றம் தொடர்பான உள்ளக அரசாங்கக் குழுவின் தகவல்களின் பிரகாரம், காலநிலை மாற்றத்தின் விளைவாக கடல்மட்டம் உயர்ந்து வருவதன் காரணமாக 94 மில்லியன் மக்கள் இருப்பிடமற்ற நிலைக்கு தள்ளப்பட் டுள்ளதாகவும், உயரும் கடல் மட்டத்தால் ஏற்படும் 60 சதவீதமான பாதிப்புகளை இந்தியா , பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் மின்மார் போன்ற தென் ஆசிய பிராந்திய நாடுகளே எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலநிலை மாற்றமானது மனிதர்களின் வாழ்வுடன் பல்வேறு வழிகளிலும் தொடர்புபட்டுள்ளதாக தெரிவித்த உலக சுகாதார ஸ்தாபனம், இயற்கை அனர்த்துக்கு அப்பால் காலநிலை மாற்றமானது வெள்ள அபாயம், வாந்திபேதி, டெங்கு, மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதையும் விரைவுபடுத்துவதாக கூறுகிறது.

2050ஆம் ஆண்டுக்குள் உலக சனத்தொகை 9 பில்லியனை எட்டவுள்ள நிலையில் உலகில் மூன்றில் ஒரு பகுதியினராக இந்தியர்கள் அல்லது சீனர்கள் விளங்கவுள்ளதாகவும், இந்நிலையில் காலநிலை மாற்றத்தால் இவ்விரு நாடுகளுமே மோசமான பாதிப்புகளை எதிகொண்டுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது. (அ–5)

## இராசிபலன்

09.06.2008
(வைகாசி 27, திங்கட்கிழமை)
மகம் பின்னிரவு 02.17 மணிவரை
ஷஷ்டி பிற்பகல் 02.33 மணிவரை
இராகுகாலம் 07.22-08.52 மணிவரை
சுபநேரம்-11.52-01.22 மணிவரை
ஷஷ்டி விரதம்
கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கொடி.

| | |
|---|---|
| மேடம் | அஜீரன ரோகம், தாழ்ந்த சுபாவம், வேலைச்சுமை, காரிய தாமதம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, சுபசெலவு, வாகனசுகம். |
| மிதுனம் | நற்கீர்த்தி, கூட்டுமுயற்சி, தேக நலன், விருந்துபசாரம். |
| கடகம் | விவாதம், வேலைச்சுமை, தன விரயம், காரியதாமதம். |
| சிங்கம் | வெகுமானம், சயன்சுகம், அதிக பிரயாசை, கற்பனை மிகுதி. |
| கன்னி | காரிய அலைச்சல், பிதாசிந்தை, பெரியோர் சந்திப்பு. சுபசெலவு. |
| துலாம் | மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை. |
| விருச்சிகம் | நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், தூரதேசச் செய்தி. |
| தனுசு | எதிர்பாராத செலவு, இடமாற்றம், புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை. |
| மகரம் | பொருள்விரயம், காரிய தடங்கல், ஆரோக்கியக்குறைவு, திடீர்நன்மை. |
| கும்பம் | செல்வாக்கு, காரிய நன்மை, பணவருவாய், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | சத்துருஜெயம், திடீர் பயணம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும். |

வளவன்

## தேசிய இலக்கியப் போட்டிகள் யாழ்.மாவட்ட முடிவுகள்

“கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நடாத்தப்பட்ட தேசிய இலக்கியப் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதன் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் பிரதேச செயலக/உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக வெளியிடப்படுகின்றது. -

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

செல்வி ஷாகிர்த்தியா சிறீஸ்குமார்-கரவெட்டி பி.செ., பயஸ் பியற்றிஸ்-யாழ்ப்பாணம்பி.செ., செல்விசாம்பவி அருந்தவராசா–உடுவில் பி.செ.

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

செல்வி பிருந்தா சிவசுப்பிர மணியம்- பருத்தித்துறை பி.செ., கணநாதன் உஷாந்தன்–நல்லூர் பி.செ., செல்வி ஜெ.ஜெயதர்சினி, சாவகச்சேரி.,அ.ரமா– ஊர்காவற்றுறை உ.அ.

**கவிதை (கனிஷ்ட பிரிவு)**

செல்வி செ.சர்வகா–உடுவில், டா.சில்பேபியா–நெடுந்தீவு, மணிதரன் மிதுஷா–பருத்தித்துறை, வி. பெனிஸ்லஸ்துஷான்–யாழ்ப்பாணம்.

**கவிதை (கனிஷ்ட பிரிவு) ஆங்கிலம்**

செல்வி. அபிராமி முத்துலிங்கம்–சாவகச்சேரி.

**கவிதை (சிரேஷ்ட பிரிவு)**

உதயகுமார் லக்ஷனா–தெல்லிப்பளை, மகேந்திரராஜா துவாரகன்–நல்லூர் , இ.மயூரி–பருத்தித்துறை.

**கவிதை (திறந்த பிரிவு)**

வயிரமுத்து சின்னப்பா–சாவகச்சேரி, பா.வேதநாயகம்–பருத்தித் துறை, ஆனந்தலட்சுமி அருளானந்தம்–ஊர்காவற்றுறை, ஜோர்ச் ஜெஸ்ரின்–யாழ்ப்பாணம்.

**கவிதை (திறந்த பிரிவு) ஆங்கிலம்**

திருமதி. ஷ. உருத்திராதேவி–சாவகச்சேரி, திருமதி பகீரதி கலைச் செல்வன்–கரவெட்டி.

**சிறுகதை (கனிஷ்ட பிரிவு)**

செல்வி.இ.கபிலினி–சாவகச்சேரி, செல்வராசா யசோதா–உடுவில், ஸ்ரீரங்கநாதன் சிந்துஜா–ஊர்கா வற்றுறை.

**சிறுகதை (சிரேஷ்ட பிரிவு)**

ரவீந்திரன் மதுரன்–நல்லூர், செல்வி.நாரணி தயாபரமூர்த்தி–உடுவில், ஜெ.அ.யூட்பிரதீபன்–யாழ்ப்பாணம், ர.விஜிதா– கரவெட்டி.

**சிறுகதை (திறந்த பிரிவு)**

திருமதி.ந.உதயலதா–சாவகச்சேரி, பசுபதி உதயகுமார்–தெல்லிப் பளை, தேவமதியோசப்–சண்டிலிப்பாய், கிரிசா வேலாயுதபிள்ளை– உடுவில்.

**சிறுகதை (திறந்த பிரிவு) ஆங்கிலம்**

இராசையா பஞ்சலிங்கம்–பருத்தித்துறை.

**பாடலாக்கப் போட்டி (திறந்த பிரிவு)**

கணபதிப்பிள்ளை முத்து வேலு–கரவெட்டி, கதிரவேலு நல்லதம்பி–சங்கானை, திருமதி தெய்வநாயகம் கிருஷ்ணசாமி–சாவகச்சேரி, அரியாலையூர் சி.சிவதாசன்–நல்லூர்.

**பாடலாக்கப் போட்டி (திறந்த பிரவு)–ஆங்கிலம்**

திருமதி.ஷண்முகநாதன் உருத்திராதேவி–சாவகச்சேரி (அ)



தொல்புரம் “கொட்டியம்பதி” ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சித்திராப் பௌர்ணமி தின கலைவிழாவில் ஆர்மோனிய இசையரசு க.லோகேஸ்வரனின் நெறியாக்கத்தில் உருவான “பக்த பிரகலாதன்” இசை நாடகத்தில் ஒரு காட்சி.

## வருடாந்தப் பெருவிழா

சரவணை-பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவில் வருடாந்தப் பெருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 18ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (அ-7)

## பரப்புரைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், ஆளுநர்சபை உறுப்பினர் எஸ்.துரை ரெட்ணம், பரப்புரை உத்தியோகத்தர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-134)

## சட்ட விரோத மின்பாவனையாளர் ஐவருக்கு அபராதம் விதிப்பு

(பருத்தித்துறை)

சட்டவிரோதமாக திருட்டு மின்பாவனையிலீடுபட்ட துன்னாலையைச் சேர்ந்த ஐந்து குடும்பத்தவர்களுக்கு 50ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு அவர்களை இலங்கை மின்சார சபைக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினர் பொலிசாரின் அனுசரணையுடன் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனைகளின் போதே இத்திருட்டு மின்பாவனையாளர்கள் பிடிபட்டுக் கொண்டனர்.

அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி இலங்கை மின்சாரசபைக்கு எதிரிகள் நட்டஈடு வழங்கவேண்டும் எனவும் உத்தரவிட்டு எதிரிகளைக் கடுமையாக எச்சரித்தார். திருட்டு மின்பாவனைக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டன.

திருட்டுமின்பாவனையாளர்களைக் கண்டுபிடிக்க இலங்கை மின்சாரசபையினர் பொலிஸாரின் உதவியுடன் தொடர்ந்தும் திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

## ப ரிபாலனசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதுவீதி கொய்யாத் தோட்டம் ஞான செல்வ விநாயகர் தேவஸ்தான புதிய பரிபாலன சபை தெரிவு அண்மையில் நடைபெற்றது.

அதில் போசகர் நல்லை ஞானசம்பந்தர் குரு மகா சந்நிதான சிவஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் லயன். அ.சாந்தலிங்கம் ஆகியோரும், தலைவராக கோ.தியாகராஜாவும், செயலாளராக கு.இராஜசிங்கமும், பொருளாளராக த.லோகநாதனும், உபதலைவராக செல்வன் வ.ஜெனனனும், உப செயலாளர்களாக செல்வன் இ.பகீரதன், ப.இராஜரட்ணம், ஐ.வர்ணகுலசிங்கம், ஆ.இரகுநாதன், பே.அருளானந்தம் ஆகியோரும், உள்ளகக் கணக்காய்வாளராக அ.ம.ரவீந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-7)

## யாழ்.செயலக மடல் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தினாலும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களாலும் முன்னெடுக்கப்படும் மாவட்ட அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களின் விபரங்களைத் தாங்கிய "செயலக மடல்" தைமாத இதழ் வெளிவந்துள்ளது. (அ-7)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (அ-7)

# மண்டைதீவு வாழ் மக்களுக்கு குடிநீர் வழங்க உதவுமாறு அரச, அரசு சாரா நிறுவனங்களுக்கு கோரிக்கை

நான் கிழமைக்கு இரு தடவை மண்டைதீவுக்கு மருத்துவ சேவைக்கு சென்று வருகிறேன். சில சமயங்களில் தடங்கலும் ஏற்படுவதுண்டு எனினும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிழமை தோறும் இரு இடங்களில் வைத்திய சேவை நடாத்தி வருகின்றது.

இம்மாதம் நடந்த தாய், சேய் நல பிணியாய் நிலையத்தில் கர்ப்பிணித்தாய்மார் சிலரின் கால்களில் வீக்கம் இருந்தது. யாழ். போதனா வைத்தியசாலை நிபுணர் வைத்திய கலாநிதி பேரானந்தராஜா தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் பருக வேண்டும் இதனால் சிறுநீரக நோய்கள் வராது என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

சகலரும் இவ் வெப்ப காலத்தில் நீர் அதிகம் பருக வேண்டும் என்று கூறினோம். உடனடியாக அங்கிருந்த தாய்மார்கள், நோயாளிகள் அதிர்ச்சிதரும் திடுக்கிடும் செய்தியைக் கூறினார்கள். கடந்த ஆறுமாதமாக பவுசரில் தண்ணீர் வழங்கப்படவில்லை என்றும், அத்தீவில் கடற்கரையில் உள்ள ஒரு நன்னீர் கிணற்றில் அத்தீவில் உள்ளவர்களும், வந்திருப்பவர்களும் நீர் எடுக்கிறார்கள். இதனால் நீர் கிடைப்பது மிகவும் சிரமம் என்று கூறினார்.

மனித வாழ்விற்கு உணவு, நீர் , உறைவிடம் முக்கியமானவை. நீர் விநியோகம் தடைப்பட்ட காரணத்தை ஆராய்ந்த போது முன்பு அரச சார்பற்ற நிறுவனம் இச் சேவையைச் செய்ய நிதி வழங்கியதாகவும், கார்த்திகையுடன் நிதி வழங்கலை நிறுத்திக் கொண்டதால், நீர் விநியோகிக்கப்படவில்லை என்று அறிந்தோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் இம் மண்டை தீவு மக்களுக்கு நன்னீர் வழங்க நிதி வழங்கி முன்பு போல் சேவையைத் தொடர உதவி செய்யுமாறு அன்புடன் கேட்கிறேன்.

Dr.ஆ.திருநாவுக்கரசு
பதிவு வைத்திய அதிகாரி
கிராமிய வைத்தியசாலை
வேலனை.

# தொழிற்பயிற்சி நிலையங்களை இணைத்து, உயரிய பயிற்சிகளை வழங்க அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தனித்தனியாக இயங்கி வருகின்ற தொழிற்பயிற்சி நிலையங்களை ஒன்றாக இணைத்து அதன் மூலமான பயன்பாடுகளை உரிய முறையிலும் உயரிய வகையிலும் பயிற்சியாளர்களுக்கு வழங்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் தற்பொழுது குடாநாட்டில் வெவ்வேறாக இயங்கி வருகின்ற இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இலங்கைத் தொழிற் திணைக்களம், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற பிரதேச தொழிற்நுட்ப பயிற்சி நிலையம் போன்றவற்றை சமூக சேவை அமைச்சின் கீழான பிரதேச தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் கீழ் ஒன்றிணைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி பயிற்சி நிலையங்கள் யாழ்.குடாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், கரவெட்டி, சாவகச்சேரி மற்றும் வேலணை ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டு அந்தந்தப் பகுதிகளின் வளங்களை முன்னிலைப்படுத்தி தொழிற் பயிற்சிகள் வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தொழிற் பயிற்சி நிறுவனங்களை இவ்வாறு ஒருங்கிணைப்பதன் மூலம் வளங்களை ஒருமுகப்படுத்தி தொழிற்பயிற்சி பெறுநர்களுக்கான உரிய பயன்களை அதிகபட்ச அளவில் வழங்க முடியும் என்பதே அமைச்சரின் எதிர்பார்ப்பாகும். (அ)

# சுகாதார ஊழியர்களின் ஆவணங்கள் பேணுவது தொடர்பில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் சுகாதார ஊழியர்களின் ஆவணங்களை பூரணப்படுத்தி பேணுவது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடமாடும் சேவை மாவட்டம் பூராகவும் நடைபெற்று வருகிறது.

இதன் பிரகாரம் கடந்த வாரம் வடமராட்சியில் நடைபெற்ற நடமாடும் சேவையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார சேவைகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் விடயம் தொடர்பான முகாமைத்துவ உதவியாளர்கள் கொண்ட குழுவினர் வடமராட்சிப் பிரதேசத்தில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களின் சேவைக்கால ஆவணங்களை மீள் பார்வை செய்தனர்.

இந்த நடமாடும் சேவையின் ஊடாக சுகாதார ஊழியர்களின் சேவைக்கால ஆவணங்களை சீர்செய்து இல்லாத ஆவணங்களை மாகாணசபையிலிருந்து பெற்று ஊழியர்களின் சுய விபரக் கோவைகளை சீராகப் பேணுவதன் ஊடாக, ஊழியர்களின் பதவியுயர்வு, ஓய்வுதியத்தை விரைவாகவும் சீராகவும் பெற்றுக் கொடுப்பதே நோக்கமென சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-5)




## புற்றுநோய் சிகிச்சை நிலைய மூன்றாவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினராக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) பொ.தயானந்தனும் கலந்துகொள்வர்.

## தரச் சான்றிதழுடன் பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

231 கோயில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சுவிஸ் மினரலின் தயாரிப்புகள் இன்று முதல் SLS தரச் சான்றிதழுடன் 'யாழருவி' என்ற பெயரில் வெளிவரவுள்ளதாக அதன் தயாரிப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள். (அ)

## திருக்கல்யாணம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பகவதி பகவான் திருக்கல்யாணம் இன்று திங்கட்கிழமை யாழ்.வண்ணை ஸ்ரீ லஷ்மி நாராயணன் மண்டபத்தில் (பெருமாள் கோயில்) காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அனைத்து பக்தர்களையும் வருகைதந்து ஆசியைப் பெறும் வண்ணம் கொக்குவில் மேற்கு யாழ்.ஏகத்துவ தலைமையகம் அறிவித்துள்ளது. (அ-7)

## அனலைதீவு சதாசிவ ம.வித்தி. மாணவன் மாவட்டத்தில் முதலிடம்

மாவட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் பத்தொன்பது வயதின் கீழ்ப்பிரிவு ஈட்டி எறிதல் நிகழ்வில் அன லைதீவு சதாசிவ



மகாவித்தியா லய மாணவன் செல்வன் திருச்செல்வம் கஜேந் திரன் முதல் இடம் பெற்று மாகாண மட்ட மெய்வன்மை போட்டி நிகழ்விற்கு தெரி வாகி உள்ளார்.

இம்மாணவன் பத்தொன்பது வயதின் கீழ்ப்பிரிவில் தட்டெறிதல் நிகழ்விலும் மூன்றாம் இடத்தை மாவட்ட மட்டத்தில் பெற்றுள்ளார்.

இவர் கடந்த வரும் மாவட்ட மட்டத்தில் பத்தொன்பது வயதின் கீழ்ப்பிரிவில் ஈட்டி எறிதல் நிகழ்வில் மூன்றாம் இடத்தையும் தட்டெறிதல் நிகழ்வில் இரண்டாம் இடத்தையும் பெற்றி ருந்தார்.

தீவக வலயத்தின் சார்பில் இம்மாணவர் ஒருவரே இவ்வாண்டு முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவ்வெற்றியானது அனலைதீவு சதாசிவ மகாவித்தி யாலயம் படைத்த வரலாற்றுச் சாதனை யாகும். (அ)



அல்வாய் வடக்கு மகாத்மா முன்பள்ளிச்சிறுவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஸ்ண சாரதா சேவாச்சிரமம் 5 நாட்களும் பசுப்பால் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி.சித்ரூபானந்தா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும் சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் பால் அருந்துவதையும் படங்களில் காணலாம். (பருத்தித்துறை நிருபர்)

# அண்டர்சன், சயிட் பொத்தம் அசத்தல்; நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வி

## தொடரை தனதாக்கியது இங்கிலாந்து

அன்டர்சன், சயிட் பொத்தம் அசத்தலான பந்துவீச்சால் இங்கிலாந்து அணி மூன்றாவது டெஸ்டில், இன்னிங்ஸ் மற்றும் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறிய நியூசிலாந்து அணி பரிதாபமாகத் தோல்வியடைந்தது.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் சமநிலையானதுடன் இரண்டாவது டெஸ்டில் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி, தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 5ஆம் திகதி நொற்றிங்காமில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 364 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பீற்றர்சன் 115 ஓட்டங்களையும் அம்புறுஸ் 67 ஓட்டங்களையும் பிரோட் 64 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஓபிறின் 4 விக்கெட்டுக்களையும் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அன்டர்சனின் துல்லியமான பந்துவீச்சில்




அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முதலாவது இன்னிங்ஸில் 241 ஓட்டங்களால் பின்னிலையில் பொலோ ஓன் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதில் ஹவ் 40 ஓட்டங்களையும் ரெய்லர் 21, ஹோப்கிங்ஸ் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஏனைய வீரர்கள் இரட்டை இலக்கைக் கூட அடையவில்லை. பந்துவீச்சில் அன்டர்சன் 7 விக்கெட்டுக்களையும் பிரொட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.




பொலோ ஓன் நிலையில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 241 ஓட்டங்களை எடுக்க வேண்டுமென்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சயிட் பொத்தமின் வேகத்தில் சிக்கி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை மாத்திரமெடுத்து இன்னிங்ஸ் மற்றும் 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் மக்குலம் 71, ஜேக்கப் ஓரம் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பினான் 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயிட் பொத்தம் 6 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், பிரொட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் சொந்த மண்ணில் தக்க வைத்தது.

இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு திருப்புமுனையாக



திகழ்ந்த அன்டர்சன் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஸ்ரொரஸ் தட்டிச் சென்றார். (5)

## இவானோவிச் சம்பியன்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில் சேர்பியாவின் அனா இவானோவிச் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார்.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் டினரா சபினாவை 6:4,6:3 என்ற செட்களில் வீழ்த்தினார்.

இதன் மூலம் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இவர் உலகின் நம்பர் 1 வீராங்கனை என்ற பெருமையையும் பெறுகிறார். ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது.

நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் தரவரிசையில் நம்பர் 1 இடத்தைப் பிடிக்க காத்திருக்கும் செர்பியாவின் அனா இவானோவிச், ரஷ்யாவின் டினாரா சபினாவை எதிர்கொண்டார். கடந்த முறை இங்கு இறுதிப்போட்டி வரை வந்து கோட்டை விட்ட இவானோவிச் இம் முறை ஆரம்பத்திலிருந்தே கவனமாக விளையாடினார். முதல் செட்டை 6:4 என எளிதாக வென்றார். இரண்டாவது செட்டிலும் சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்த இவர் அதை 6:3 என கைப்பற்றினார். இறுதியில் 6:4, 6:3 என்ற நேர் செட்களில் வென்று முதல் கிராண்ட்ஸ்லாம் கோப்பையைக் கைப்பற்றினார். (5)

## 'யூரோக்' கிண்ண கால்பந்துத் தொடர்; செக்குடியரசு, போர்த்துக்கல் அணிகள் வெற்றி

(பாசல்)

'யூரோ' என அழைக்கப்படும் ஐரோப்பியக் கோப்பை கால்பந்துப்போட்டி நேற்று முன் தினம் கோலாகலமாக ஆரம்பமானது.

உலகக் கோப்பைப் போட்டிக்கு அடுத்து



மிகவும் பிரபலமான போட்டி என்பதால் ரசிகர்கள் மத்தியில் இத் தொடருக்கு அதிக ஆர்வம் இருந்தது.

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டுமே இதில் பங்கேற்கின்றன.

13-வது யூரோக் கோப்பைப் போட்டிகளை ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

இதில் 16 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் 4 நாடுகள் இடம்பெற்றன. லீக் முடிபில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெறும்.

சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள பாசல் நகரில் நடந்த முதல் ஆட்டத்தில் ஏ பிரிவிலுள்ள செக் குடியரசு -சுவிட்சர்லாந்து அணிகள் மோதின.

உள்ளூர் ரசிகர்களின் ஆதரவால் சுவிட்சர்லாந்து வீரர்கள் தொடக்கத்திலிருந்தே ஆக்ரோஷத்துடன் விளையாடினர்.

முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. ஆட்டத்தின் 70-வது நிமிடத்தில் செக் குடியரசு கோல் அடித்து சுவிட்சர்லாந்துக்கு அதிர்ச்சி கொடுத்தது.




பதில் ஆட்டக்காரரான வால்செவ் சுவர்கோஸ் இந்தக் கோலை அடித்தார். சுவிட்சர்லாந்து வீரர்களால் பதில் கோல் அடிக்க முடியவில்லை.

அந்த அணி வீரர்கள் அடித்த பல சொட்கள் கோல்கம்பத்தில் பட்டன. அந்த அணிக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இறுதியில் செக் குடியரசு 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

அந்த அணி அடுத்த ஆட்டத்தில் போர்த்துக்கல்லை நாளை மறுதினம் எதிர்கொள்கிறது. சுவிர்சர்லாந்து அதேநாளில் துருக்கியுடன் மோதுகின்றது.

இலங்கை நேரப்படி நள்ளிரவு ஜெனீவாவில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் போர்த்துக்கல் -துருக்கி அணிகள் (ஏ பிரிவு) மோதின.

போர்த்துகல் வீரர்களின் அபாரமான தாக்குதல் ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து விளையாட முடியாமல் துருக்கி வீரர்கள் திணறினார்கள்.

போர்த்துக்கல் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் தான் இந்த இரண்டு கோல்களும் விழுந்தன. பெபி, ரவுல் மெய்ர்எலிஸ் ஆகியோர் கோல் அடித்தனர். (5)

## முன்னணி நாடுகளின் ௮ அணிகள் பங்கேற்கும் சம்பியன் லீக் தொடர்

### இங்கிலாந்து கிரிக்கெற்சபை நடாத்துகின்றது

(லண்டன்)

ஐ.பி.எல்.கிரிக்கெற் போட்டிகளின் மகத்தான வெற்றியை அடுத்து உலகின் 8 முன்னணி அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நடத்தவுள்ளது.

இதில் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாட்டு அணிகள் பங்கேற்கவுள்ளன. இந்திய கிரிக்கெற் சபை இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) எனும் அமைப்பை ஏற்படுத்தி முதலாவது இருபது-20 தொடரை நடத்தியது. இந்தத் தொடர் மகத்தான வெற்றியை பெற்றது.

இதனையடுத்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை, இதே முறையில் சம்பியன்ஸ் லீக் எனும் பெயரில் இருபது-20 தொடரை நடத்த தீர்மானித்துள்ளது.

இந்தப் போட்டிகளில் 8 அணிகள் பங்கேற்க உள்ளன. இந்தியாவிலிருந்து இரண்டு அணிகளும்; இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்த இரண்டு அணிகளும் பங்கேற்கவுள்ளன.

ஐ.பி.எல்.போட்டியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் மற்றும் 2ஆவது இடம் பிடித்த சென்னை ஆகிய அணிகள் இந்தியா சார்பில் பங்கேற்கின்றன. மொத்தம் 15 போட்டிகள் கொண்டதாக இந்த லீக் நடைபெறும். இந்தியா அல்லது மத்திய கிழக்கு நாட்டில் இத் தொடர் நடத்தப்படவுள்ளது.

வெற்றி பெறும் அணிக்கு 5 மில்லியன் டொலர்கள் பரிசாக வழங்கப்படும்.

செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் இந்த இருபது-20 கிரிக்கெட் தொடர் நடைபெறும். (5)

# மீன் பார்வை

# நோத் முதல் கோபல்லவா வரை 1

**க.சி.குலரத்தினம்**



## எங்கள் இலங்கை

பொங்கியெழும் வெள்ளித்திரைகளையுடைய இந்து சமுத்திரத்திலே மங்காப்புகமுடன் அன்று தொடக்கம் இன்று வரை புலவர் நாவில் பொருந்திய புகழுடன் விளங்குவது எம் தாய்த்திருநாடாகிய இலங்கை. இஃது இந்து சமுத்திரத்திலே உள்ள ஒரு முத்து. இதற்கு ஈழம் முதலாக ஸ்ரீலங்கா இறுதியாக எத்தனையோ திரு நாமங்கள் வழங்குகின்றன. இந்தியர், சீனர், யவனர், அராபியர், டேனியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் இலங்கையின் கவின் பெறுவனப்பையும் வளப்பத்தையும் கண்டு தம் இதயத்தைக் கொள்ளை கொண்ட இப்பொன் நாட்டுக்கு எத்தனையோ பெயர்களை வழங்கியுள்ளார்கள்.

இலங்கா, நித்தில துவீபம், பதுமராக துவீபம், மாணிக்க துவீபம், சிங்கதுவீபம் தாமிர வருணி, தாபிரபனி,தபோவனம் என்பன வாகிய பெயர்களை நோக்கிய எங்கள் செந்தமிழ் சோமசுந்தரப் புலவர் அவர்கள்

'செம்மை சேர்திருத் தாமிர வர்ணியே
சீதை தங்கு தபோவனச் சூழலே
மும்மை யுந்தரு மாணிக்கதீவமே
முடிவிலாதுறை சிங்கள தேசமே
வெம்மை விற்கொடி சேரன்துவீபமே
வேதம் கூறி விடுமிடை நாடியே
இம்மை யேவரு மிந்திர லோகமே
ஈழமேயெம் மிலங்கையின் நாமமே'

என அழகாகப்பாடியுள்ளார்.

பல நாடுகளில் அரச தூதுவராயிருந்த K.P.S. மெனன் என்ற இந்திய இராஜ தந்திரி இலங்கையைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்துள்ளார். 'இலங்கை அழகுள்ள நாடு. இலங்கைக்கு எல்லாவளங்களும் அழகுகளும் நிரம்ப உண்டு. மலைகள்,குன்றுகள், சோலைகள், காடுகள், பள்ளத்தாக்குகள், புன்னிலங்கள், சமவெளிகள், புற்றரைகள் ஆகிய இத்தியாதி வேலைப்பாடுகள் அமைந்த நாடு வெள்ளி அலைமோதும் கடலிடையுள்ளது' என்பது அவருடைய புகழுரையின் ஒரு பகுதியா கும்.

இலங்கையின் சிறப்பியல்புகளை 45 ஆண்டுகளுக்கு முன் இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளின் கிறிஸ்தவ இளைஞர் சங்க பொதுக்காரியதரிசியாயிருந்த வணக்கத்துக்குரிய E.C.டேவிக் M.A. அவர்கள் 'இலங்கையைப் போன்றகவின் பெறு வனப்பும் வளப்பமும் பொருந்திய இன்னொரு நாடு உலகில் எப்பாகத்திலும் இல்லை இலங்கையின் பசுமைக்கும் அதன் பழைய நகரங்களின் வெண்மைக்கும் வானுற வளர்ந்த மரங்களடர்ந்த கானகங்களுக்கும், செவ்வுற ஓடும் ஆறுகளுக்கும், குளிர்மையான குளங்களுக்கும், கம்பீரமான தகோபாக்கள் கோயில்களுக்கும் இணையாக எவற்றைக்கூறலாமென எனக் குத் தெரியவில்லை.

பொலநறுவை வாடிவீட்டு உப்பரிகையில் நின்று எதிரேயுள்ள கடல்போன்ற அரச குளத்தையும் அதற்கப்பால் கவினுறக் காட்சியளிக்கும் மலைத்தொடர்களையும் இப்பால் இடிந்து கிடக்கும் பழைய அரண்மனையாகிய கட்டடங்களையும் காணும் தோறும் இலங்கையின் பழைய மாட்சிமை மிக்க நாகரிகம் கண்முன்னே புலப்படுகிறது. இன்னும் சிகிரியா,மிகிந்தலை,அனுராதபுரம்,திசைமாறாமை ஆகிய இடங்களின் வனப்பும் மனதுக்கு இனிமையாகவே உள்ளன. காலி, மாத்தறை, தங்காலை, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார்,புத்தளம் ஆகிய கரையோர நகரங்களின் கண்கவர் கோட்டைகளும் கட்டடங்களும் ஒல்லாந்தரின் கைவன்மையைக் காட்டுவனவாயுள்ளன.

கண்டியின் கவின் பெறுவனப்பை காணாத கண்களும் கண்களோ? கண்டியின் பெரகரா விழாவும், ஆனைகளின் பவனியும், இன்னிசை வாத்தியவொலியும், வெளி நாட்டாராகிய எங்களுக்குக் குதூகலத்தை விளைவிப்பனவாயுள்ளன. மிகவுயர்ந்த சிவனொளி பாதமலைப் பாகங்களில் இலங்கையின் அழகு பூரணப் பொலிவு பெற்றுப் பூத்துக் குலுங்குகின்றது. சிவனொளிபாதமலையில் சூரிய உதயமும் அதே நேரத்தில் அதன் நிழற்படிவும் பார்ப்பவருக்குப் பரவசமூட்டும் ஒப்புயர்வற்ற அற்புதக்காட்சி என்றே கூறவேண்டும் என்று கூறியுள்ளார்.

வெனிஸ் வர்த்தகராகிய மாக்கோ போலோ தாம் எழுதிய பிரயாண நூலில் இலங்கையைப் பற்றி குறிப்பிடும்பகுதியை இங்கே குறிக்கின் மிகையாகாது. 'இலங்கையின் அளவினதான தீவுகளில் இலங்கையைப் போன்ற அழகான தீவு இவ்வுலகில் எங்கும் இல்லை முன்னொரு காலத்தில் மிகப் பெரியதாக இருந்த இத்தீவு கடற் கொந்தழிப்பால் மிகவும் சிறியதாகிவிட்டது. இந் நாட்டை முடி சூடிய ஓரரசன் ஆளுகிறான். அவன் எந் நாட்டவருக்கும் திறை கட்டுவ தில்லை இந் நாட்டு மக்கள் நெற்றானியத்தை அதிகம் விளைவு செய்கிறார்கள். இன்னும் எள்ளை விளைவித்து அதில் எண்ணெய் வடித்து உபயோகிக்கிறார்கள். இந்நாட்டில் பாலும் தேனும், இறைச்சியும், கள்ளும் அதிகமாய் உண்டு.

இவை எல்லாவற்றையும் விட இந்நாட்டில் இரத்தினக்கற்கள் உண்டு. இரத்தினங்களுள் மிக மேலானதும் அதிக விலையுள்ளதுமான ஓரிரத்தினக்கல் இந்நாட்டு மன்னனிடம் உண்டு அதனைப் பெறுவதற்கு சீன தேசத்தரசன் வெகுவாக ஆசைப்பட்டு முயன்றான். சீன தேசத்தின் மிகப் பெரிய மாகாணம் ஒன்றின் பெறுமதியளவு பொன்தரலாம் என்று கேட்ட போதிலும் ஈழத்தரசன் இரத்தினக் கல்லைக் கொடுக்க மறுத்து விட்டான்.

(தொடரும்)

# கச்சா விலை உயர்வு நடவடிக்கை யாருக்கும் நல்லதல்ல எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(ஜப்பான்)

கச்சா எண்ணை விலை நேற்று ஒரு பீப்பாய் 139 டொலராக உயர்ந்தது. இந்த விலை உயர்வு நடவடிக்கை யாருக்கும் நல்ல தல்ல என்று கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

**5 மடங்கு உயர்வு**

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்று முன் தினம் ஒரே நாளில் மட்டும் ஒரு பீப்பாய் கச்சசா எண்ணெய் விலை 103/4 டொலராக அதிகரித்து 138.54 டொலராக உயர்ந்தது. கடந்த 2003ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த விலை உயர்வு 5 மடங்கு ஆகும்.

இந்த விலை உயர்வு உலக நாடுகளிடையே பலத்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

**பெரிய சுமை**

இது பற்றி ஜப்பான் நாட்டின் ஆமோரி என்ற நகரத்தில் அமெரிக்கா, ஆசியா கண்டத்தின் பெரிய நாடுகளான இந்தியா த ஜப்பான். சீனா. தென்கொரியா ஆகியவற்றின் அதிகாரிகள் கூடி ஆலோசனை நடத்தினார்கள்.

பின்னர் 5 நாடுகளும் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டன. அந்த அறிக்கையில் சமீபத்தில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. இதற்கு முன் இல்லாத அளவுக்கு இந்த விலை உயர்வு உள்ளது.

கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும், கச்சா எண் ணெய்யை பயன்படுத்தும் நாடுகளுக்கும் இது எதிரானது. குறிப்பாக இயற்கை வளம் இல்லாத நாடுகளுக்கு இது பெரிய சுமை.

இந்த விலை உயர்வு அரசியலில் ஒரு உணர்வு பூர்வமான கட்டத்தை உண்டாக்கி உள்ளது. எண் ணெய்க்கான மானியத்தை நீக்க வேண்டும். எரிசக்தி திறனை அதிகரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**யாருக்கும் நல்லதல்ல**

இதற்கிடையே அமெரிக்காவின் எரி சக்தி இலாகா மந்திரி சாமுவேல் போட் மேன், கச்சா எண்ணெய் உற்பத்தி நாடு களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார்.

இது பற்றி அவர் கூறுகையில், கச்சா எண்ணெய் விலையின் இந்த அபரிதமான உயர்வு, கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு நல்லதல்ல. இதனால் அமெரிக்க பொரு ளாதாரம் சிக்கலுக்குள் தவிக்க வேண்டும் என்று பார்க்க விரும்பினால், அவர்களுக்கு நல்லதல்ல. உலக பொருளா தார நடவடிக்கைகளில் அமெரிக்காதான் முக்கிய எந்திரமாக திகழ்கிறது. என்பதையும் அவர்கள் (கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள்) எங்களைத் தான் சார்ந்து இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று தெரிவித்தார். (அ-5)

# ஜனாதிபதி பதவிக்கு முன்னாள் பிரதமர் பிரசாத்தின் பெயரை பரிந்துரைத்தது நோபாள காங்கிரஸ்

(காத்மண்ட்)

நேபாள ஜனாதிபதிப் பதவிக்கு நேபா ளத்தின் முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவை நேபாள காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் சனிக் கிழமை பரிந்துரை செய்துள்ளது.

ஜனாதிபதி பதவி தங்கள் கட்சிக்கு வேண்டாமென மாவோயிஸ்ட் கட்சி தெரி வித்துள்ளதையடுத்து நேபாள காங்கிரஸ் கட்சி கொய்ராலாவை பரிந்துரை செய்துள்ளது.

நேபாளத்தில் மன்னராட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தற்போது மக்களாட்சி மலர்ந்துள்ளது. இந்த நிலையில் நேபாளத்தின் முதல் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப் பதற் கான பணிகள் தொடங்கியுள்ளன.

கிரிஜா பிரசாத் கொய்ராலா பிரதமராகப் பதவி வகித்து நாட்டை வழி நடத்திச் சென்ற அனுபவமுள்ளவர் என்ற வகையிலும், மாவோயிஸ்ட்களை அரசியல் பாதைக்கு அழைத்து வந்தவர் என்ற வகையிலும் அவரே ஜனாதிபதிப் பதவிக்கு தகுதியானவரென நேபாள காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராம்பரன் யாதவ் கூறியுள்ளார்.


## உலக தரிசனம்

மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் மாவோயிஸ்ட்கள் வெற்றிபெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. எனினும் நேபாள மன்னர் ஞாநேந்திரா தொடர்ந்தும் அரண்மனையில் தங்கியிருப்பதற்கு புதிய அரசாங்கம் அனுமதி வழங்கியிருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தை நிறுத்தி ஒபாமாவுக்கு ஹிலாரி பூரண ஒத்துழைப்பு

(நியோர்க்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜன



நாயக கட்சியின் சார்பில் போட்டியி டுவதற்காக பதினேழு மாத காலமாக செய்து வந்த பிரசாரத்தை ஹிலாரி கிளின்டன் முடிக்கு கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாகும் தன்னு டைய முயற்சியை கைவிடுவதாக ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார்.

வொஷிங்டனில் உரையாற்றிய போது ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமாவை இவர் ஆமோதித்துள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள பராக் ஒபாமாவிற்கு தங்களது சக்தி மற்றும் பலம் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஆதரவளிக்கவுள்ளதாக ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டுள்ளார். இதற்காக 2ஆயிரம் ஆதரவாளர்கள்



உள்ளனரெனவும் அவர் கூறினார்.

மேற்படி வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்ற பராக் ஒபாமாவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்த ஹிலாரி கிளின்டன் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பராக் ஒபாமா மேலதிக வாக்கு களால் வெற்றி பெறுவாரென வும் கூறினார்.

(அ-5)

# இந்தியா (தமிழ்நாட்டில்) உயர்கல்வி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இப்போது எம்முன்னால் எழுந்துள்ள கேள்வி யாதெனில்!

எவ்வாறு தரமான கல்லூரியை நியாய மான கட்டணத்தில் தெரிவு செய்வது?

இவ்விடையத்தில் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல்களும் நடைமுறைகளும்:-

பல்கலைக்கழகங்கள் பொதுவாக University Grant Commisson இடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்

Affiliated Colleges ISO தரச்சான்று பெற்றிருத்தல் வேண்டும்

Technical Education தரச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்

இவை எல்லாம் சட்டப்படி என்பதால் எல்லா கல்லூரிகளும் இவற்றினை கொண்டிருக் கலாம்.

ஆனால் Indian Embassy இல் உள்ள கல்லூரிகளின் தகவல்கள் அடங்கிய கையேட்டில் உள்ள பட்டியலில் குறிப்பிட்ட இந்த வகையான கல்லூரிகளினூடாக கல்வித்தரம் சொல்லிக்கொள்ளும் படியாக இருக்காது.

### Educationl Consultancies

இலங்கையின் உள்ள ஒரு மாணவர் தமிழ் நாட்டில் இருக்கும் கல்லூரிகளில் தனக்குப்பொருத்தமானதை தெரிவு செய்வதற்கு இரண்டு நடைமுறைகள் உள்ளன.


முதலாவது நேரடியாக College Seeking Visa உடன் தமிழ்நாட்டிற்கு சென்று கல்லூரியை தெரிவு செய்து அனுமதியை பெற்று வந்து பின்னர் Student Visa எடுப்பது இது மாணவனுக்கு திருப்தி தரக்கூடியதாக இருந்தாலும் பொருட் செலவு, காலவிரயம் அலைச்சல் என்பவற்றுடன் எல்லோராலும் எல்லா சந்தர்ப்பத்திலும் இயலாததாகின்றது.

இரண்டாவது இலங்கையிலுள்ள இந்தியக் கல்லூரிகளினால் அனுமதிக்கப்பட்ட ஆலோசகர்களின் (Educationl Consultancy) உதவியை நாடுதல். இவர்கள் கல்லூரிகளுக்கான ஒரு பாலமாக செயல்படுகின்றனர்.

இதில் நன்மைகளாக

1.நேரம் சிக்கனப்படுத்தப்படுகின்றது.

2.குறிப்பிட்ட மாணவன் தனது பெற்றோருடன் குறித்த ஆலோசகரிடம் நேரடியாக



கதைத்து இது பற்றி தெளிவான அறிவை பெற்றுக்கொண்டு தீர்மானம் எடுக்கலாம்.

3.இங்கு இருந்த படியே கல்லூரியைத் தெரிவு செய்யும் வசதி

4.தெரிவின் பின் இந்தியா செல்லாது இங்கேயே அனுமதிக்கப்பட்ட ஆலோசகரிடம் கல்லூரி அனுமதியைப் பெறும் வசதி (Spot Admission)

ஆனால் இதில் அவதானம் மிகவும் அவ




சியம். இவர்கள் உடனேயே அனுமதியை பெற்றிருந்தாலும் கல்லூரிகளின் தரத்தில் நம்பகத்தன்மை மிக அவசியம் இதை நாம் மேலே குறிப்பிட்ட எளிய நடைமுறைகளை பரிசோதித்து விட்டு அனுமதி பெறுவதற்கான கட்டணம் செலுத்துவது புத்திசாலித்தனமானது.

மேலும் அனுமதிக்கு பெறப்படும் பணம் அவர்களால் எச்சந்தர்ப்பதிலும் மீளளிக்கப்படுவதில்லை. அத்தோடு கல்லூரிக்கான கல்வி கட்டணத்தினை அதாவது முதல் தொகுதி யாகிய அனுமதிக்கட்டணம் கல்விக் கட்டணங்களைத் தவிர ஏனையவற்றை அவர்கள் மூலமாக கட்டுவது புத்திசாலித்தனம் அல்ல.

அதை வங்கி ஆணை Demand Draft இன் மூலம் கல்லூரியின் பெயரில் அனுப்புவது பாதுகாப்பானதும் நம்பகத் தன்மையானதுமாகும்.

உதாரணத்துக்கு,

இரு கல்லூரிகளை எடுத்துக்கொள்வோம் முதலாவது, தரமான கல்வியை வழங்கும் அதே சமயத்தில் இரண்டாவதில் கல்வித் தரமானது குறைவாகவே இருக்கும். ஆனால் இரண்டுமே ஒரே பல்கலைக் கழகத்திடம் இணைப்புச் சான்றிதழ் (Affiliated Colleges) பெற்றிருக்கும். ஆனால் முதலாவதில் கல்வி பயின்ற மாண வர் சர்வதேச அளவில் சவால்களை எதிர் நோக்கும் வல்லமையைப்பெற்றிருப்பார் மற்றயவர் பெயரளவில் பட்டத்தினை பெற்றிருப்பார். இந்த தர வேறுபாட்டிற்கான காரணங்களாக

விரிவுரையாளர் பற்றாக்குறை

ஆய்வு கூட வசதிகள்

அடிப்படை கட்டமைப்புக்களில் உள்ள குறைபாடுகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

அதற்காக ஏறத்தாழ ஒரே குறிக்கோளை உடைய இலங்கையில் உள்ள சில Consultants ஐ பயன்படுத்தி சந்தை வாய்ப்பை பெருக்கி பணம் பெறப் பார்க்கிறார்கள். இதை அறியாத சமுகத்தில் உள்ள பெரிய உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் கூட ஏமாற்றப்பட்டு தரமற்ற ஒரு கல்வியை பயல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர் இதனால் சாதாரண ஒரு மாணவனால் தரமான கல்வியை நியாயமான கட்டணத்தில் பெற வாய்ப்புக்கள் உருவாக்க வேண்டியது அவசியம்.

மேலும் பிற நாடுகளில் இருந்து வரும் மாணவர்கள் மூலம் அவர்கள் அதிகவருமானமும் அரசாங்கத்திடம் வருமான வரிச்சலுகையும் பெறுகின்றனர்.

Consultant ஐ மட்டுமே நம்பாமல் நேரடியாக College Web site இல் தேடியும் நேரடி தொலைபேசி தொடர்புகள் மூலம் College இல் உள்ள Admission officer உடன் பேசுவதன் மூல மும் வீண் பண விரயங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

எல்லா Consultant உம் ஒரே மாதிரியான குணாதிசயங்களை கொண்டிருக்க மாட்டார்கள். சிலர் சேவை நோக்கோடு செய்யும் போது சிலர் வியாபாரமாக பார்பார்கள். சில கல்லூரிகள் வழங்கும் அதிக தரகுப் பணத்திற்காக மாணவர்களிடம் பல உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

பொருள் வியாபாரம் போன்றே இங்கே கல்வி வியாபாரத்திற்கான செயற்பாடுகளும் அதிகமாக உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

உதாரணமாக அதிக க்ட்டணத்தை கூறி அதில் புலமைப்பரிசில் தருவதாக திட்டங்களை அறிவித்து ஒரு மாயையை உரு வாக்கி மாணவர் மத்தியில் ஒரு பரபரப்பை தெளித்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை கல்வித் தரம் குறைந்த கல்லூரிகளுக்கு சேர்த்துக் கெள்ளுதல்.

ஒரே பாடத்திற்கான அனுமதிக்கட்டணம், கல்விக் கட்டணம், போதிய அறிவின்மை என்பவற்றை பயன்படுத்தி வேறு வேறு விதமாக வேறு வேறு மாணவர்களிடம் வசூலித்தல்.

குறிப்பிட்ட சில ஆலோசகர்கள் மக்களிடம் பிரபலம் பெற்ற நிறுவனங்களின் பெய ரினை வைத்து அவர்களின் நன்மதிப்பினை தமக்கு சாதகமாக பயன்படுத்துதல். இதில் வேதனையான விடயம் என்னவென்றால் அவர்கள் ஒரு தடவை கூட கல்லூரிக்கு நேரில் சென்றிருந்திருக்க மாட்டார்கள். இவற்றில் இருந்து தப்பிக்க வேண்டுமெனில் அனுமதிக்கட்டணம்

**இந்தக் கட்டுரையைத் தருபவர்கள் இந்தியாவில் உயர்கல்வி தொடர்பில் தாம் கண்ட, ஏமாற்றப்பட்ட கசப்பான அனுபவங்களை ஏனைய மாணவர்களோ, சமூகமோ அடையக் கூடாது என்பதில் உறுதியாகவுள்ளனர்.**

போன்றவை தவிர்ந்த ஏனைய கட்டணங்களை வங்கிகள் மூலம் DD நேரடியாக கல்லூரிக்கு செலுத்துதல் பாதுகாப்பானது.


ஆலோசனைக்கு சென்றவுடனேயே அவர்களிடம் அனுமதி கட்டணம் செலுத்தமால் ஏற்கனவே அக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தொடர்பினை Consultant இடமே பெற்ற அம் மாணவர்களிடம் ஆலோசித்த பின்னர் அனுமதி பெறுதல் புத்திசாலித் தனமானது.

### Admission Procedure

மாணவர் இந்தியாவில் உயர்கல்வி பயில விரும்பின் ஒரு கல்லூரியிடம் அனுமதி பெற்று Student Visa எடுப்பதற்கான படிமுறைகள் தேவையான ஆவணங்கள்.

O/L & A/L சித்தியடைந்தமைக்கான சான்றிதழ்கள் கல்வியமைச்சிடமிருந்து பெறவேண்டும்.

School Leaving certificate
Character certificate Both School & G.S
Birth certificate
Identity Card



S.ஜெயக்காந்
இயக்குநர்
V4 educational consu ltancy Private Limited.
**Email :-** V4 educational consu ltancy @ gmail.com
**Mobile :-** 0773867257

Pass Portsize Photoes

இந்த ஆவணங்கள் கையில் கிடைத்தவுடன் Consultant ஐ அணுகலாம்.

இவற்றை Check பண்ணிய பிறகு அவர் அனுமதி தருவார். அதன்போது அனுமதி கட்டணம் போன்றவை செலுத்துதல் அவசியம் ஆனால் முழுக்காலத்திற்குமான கல்விக்கட்டணம் செலுத்த தேவையில்லை. இப்போது ஏனைய ஆவணங்களுடன் Consultant கீழ் வரும் ஆவணங்களைத் தருவார்.

1.கல்லூரி கட்டண விபரம்.

2.அனுமதி உறுதிப்படுத்திய பத்திரம் Selection intimation Letter

3.DD எடுப்பதற்கான Request Letter From College

4.Student Visa எடுப்பதற்கான Request Letter From College

ஏனைய ஆவணங்களுடன் College Fees Structure ஐ Bank இல் காட்டிய பணத்தை செலுத்தி கட்ட ணத்தை DD ஆக மாற்ற வேண்டும். கல்லூரியின் பெயருக்கு முகவரி இடப்பட வேண்டும். (இவை மத்திய வங்கியின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக)

இறுதியாக எல்லா ஆவணங்களும் DD உம் கொண்டு Embassy இல் Student Visa ஐ பெற்றுக் கொள்ளலாம்.

பொதுவான கல்லூரி கட்டணங்கள்

1.Engineering (4 years)-2500 to 3000 Dollars Per year

2.Arts , Science &Commerce-20000 /- Indian Rupees (3years) Per year

3. MBA (2years)- 2500 to 3000 Dollars Per year

(முற்றும்)

# சீனாவில் பட்டப்படிப்பு படிக்க என்ன செய்ய வேண்டும்?

கடந்த 10 ஆண்டுகளில் சீனா, கல்வித் துறையில் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியை பெற்றுள்ளது. ஏராளமான பல்கலைக் கழகங் கள் பல்வேறு விதமான இளநிலை , முதுகலை பட்டப்படிப்புகளையும் ஆராய்ச்சி படிப்புகளையும் வழங்குகின்றன.

1949ஆம் ஆண்டு சீன குடியரசு உதயமான பிறகு நாட்டில் எழுத்தறிவின்மையை ஒழிப்பதும் கட்டாயக்கல்வியை அமுல் படுத்துவதும் அரசின் முக்கிய கடமைகளில் ஒன்றாக இருந்தது.

சீனா கடந்த பத்தாண்டுகளில் கல்வித் துறையின் விரைவான வளர்ச்சியை எட்டி யுள்ளது. 1998 ஆம் ஆண்டு முதல் கல்விக்கு அரசு ஒதுக்கும் நிதியின் அளவு ஆண்டு தோறும் ஒரு சதவீதம் அதிகரித்து வருகிறது. சீனாவின் கலாசாரம் மற்றும் மொழியைப் பற்றிப் படிப்பதற்கு ஹொங் கொங் உகந்த இடமாக கருதப்படுகிறது. ஹொங்கொங் சிறப்பு மாகாண நிர்வாகம். அரசு நிதியுதவி பெறும் எட்டுபல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இதில் பழம் பெருமை வாய்ந்த உலகத்தரமிக்க ஹொங்கொங் பல்கலைக் கழகம் (தற்போது இதன் வயது 100)

ஹொங்கொங் சீனப் பல்கலைக்கழகம்(40 ஆண்டு பழமை வாய்ந்தது) கிறிஸ்தவ மிஷி



னரிகளால் நிறுவப்பட்ட லிங்கன் மற்றும் பாப்பிஸ்ட் பல்கலைக்கழகங்கள் ஆகியவை அடங்கும்.

### விசா

ஹொங்கொங்கிற்கு வெளியே இருந்து வரும் மாணவர்கள் கண்டிப்பாக மாணவர் விசா பெறவேண்டும் அயல் நாட்டு மாணவர்கள் ஹொங்கொங்கிற்கு வருவதற்கு 2 மாதங்களுக்குமுன் அவர்களின் நாட்டில் உள்ள சீன தூதரகத்தில் மாணவர் விசா கோரி விண்ணப்பிக்க வேண்டும் இல்லையெனில் நேரடியாக விண்ணப்பிக்கலாம்

### தங்கும் வசதி

சீன மற்றும் ஹொங்கொங்கில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு தங்கும் இடவசதியை அளிக்கின்றன. அதே நேரத்தில் அயல் நாட்டு மாணவர்களுக்கு பல்கலைக்கழக வழாகத்திற்குள் தங்குவதற்கான வசதி அளிக்கப்படும். என்ற உத்தரவாதம் கிடையாது ஏனெனில் சில பல்கலைக் கழகங்களில் குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் தான் இடங்கள் உள்ளன. அதனால் தேவைப் பட்டால் மாணவர்கள் தாங்களாகவே வளாகத்திற்கு வெளியே தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்

### இளநிலை பட்டப்படிப்பு

விண்ணப்பத்தாரரின் கல்வித்தகுதி , குறிப்பிட்ட நிறுவனத்தில் படித்த கால அளவு ஆங்கில புலமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. ஹொங்கொங்கில் படிக்க விரும்புவதற்கான காரணத்தை விண்ணப்பதாரர்கள் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன் அவர்கள் படித்த பாடசாலை அல்லது கல் லூரி முதல்வரிடமிருந்து கடிதம் ஒன்றையும் பெற்று அனுப்ப வேண்டும். அயல் நாட்டு மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு கல்வி கற்ற பாடசாலையின் இறுதி வகுப்பு சான்றிதழை சமர்ப்பித்தாலே போதுமானது அதே போல் ஆங்கில புலமைக் கான தகுதியாக டோபஃல் அல்லது IELTS தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். (தொடரும்)

# புலிகளால் கொழும்பில் பாரிய தாக்குதல்களை நடாத்த முடியாது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

முப்படையினர் மேற்கொண்டுள்ள தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக கொழும்பில் விடுதலைப் புலிகளால் பாரிய தாக்குதல்களை நடத்த முடியாது என்று சபையின் முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நிமால், பஸ் சாரதிகள், நடத்துனர்களுக்கு விசேட அறிவூட்டல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. பயணிகளின் பொதிகளை சோதனையிடுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு பொதிகள், பைகள் தொடர்பில் விழிப்புணர்வுடனும் மிகுந்த அவதானத்துடனம் செயற்படுமாறும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளோம்.

அத்தோடு அநாதரவான பொதிகள் காணப்படுமிடத்து அது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் பொது மக்களுக்கு அறிவூட்டப்பட்டுள் ளது.

பொதுமக்களின் அசட்டை, கவனயீனம் காரணமாகவே இவ்வாறான அசம்பாவிதங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. எனவே, இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க முடியாது.

இத் தாக்குதல் தொடர்பில் சிலர் சந்தோச மடைந்துள்ளனர். அது வும் எமக்கு தெரியும் என்றார். (அ-5)

# பொத்துவில் காட்டில் கடத்தப்பட்ட ஒன்பது பேரும் விடுவிப்பு

(கொழும்பு)

பொத்துவில் காட்டுப்பகுதியில் விறகு வெட்டச்சென்ற போது கடத்தப்பட்ட 9பேர் விடுவிக்கப் பட்டுள்ளனர் என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொத்துவில் பெரிய உல்லை ஊடாக உழவு இயந்திரம் ஒன்றில் கடந்த புதன்கிழமை 12பேர் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றுள்ளனர். இவர்களை அப்பகுதியில் நடமாடிய இனந்தெரியாத ஆயுததாரிகள் கடத்தினர். பின்னர் மூவரை மட்டும் நிபந்தனையின் அடிப்படையில் விடுவித்தனர்.

ஒருவருக்கு 30ஆயிரம் ரூபா வீதம்12பேருக்கும் பணத்தை எடுத்து வந்தால் கடத்தப்பட்டுள்ள ஏனையவர்களை விடுவிப்பதாக ஆயுததாரிகள் தெரிவித்தனர் என்று விடுவிக்கப்பட்ட மூவரும் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தனர்.

கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 9பேரையும் விடுவிக்கும் நடவடிக்கையை அதிரடிப்படையினர் உடனடியாக மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே மேற்படி 9பேரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# உணவு விலையேற்றத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மேலதிகமாக 1.2 பில்லியன் டொலர் நிதியுதவி

## உலக உணவு நிகழ்ச்சித் திட்டத் தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையானது அதிகரித்துவரும் உணவு விலைகளால் பாதிக்கப்பட்டுள்ள 60 நாடுகளைச் சேர்ந்த 75 மில்லியன் மக்களுக்கு மேலதிகமாக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் ரோமில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத் தலைவர் ஜொஸெட்டே ஷீரன் இந்த அறிவிப்பைச் செய்தார்.

மேற்படி மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் செளலாளர்நாயகம்பான்கீமுன்உயிரியல் எரிபொருள் உற்பத்தி தொடர்பில் சர்வதேச கொள்கை வழிமுறையொன்றுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உலகளாவிய பட்டினிக்கு எதிராக போராடும் வகையில் உணவு உற்பத்தியை ஊக்குவிக்க ஒவ்வொரு வருடமும் 15 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி முதல் 20 பில்லியன் அமெரிக்கா டொலர் வரையான நிதி தேவைப்படுவதாக தெரிவித்தார்.

அதேசமயம் உணவு விலைகளிலான பண வீக்க நிலையினை கட்டுப்படுத்தும் முகமாக உணவு வர்த்தக தடைகள் நீக்கப்பட வேண்டும் என உலக வங்கித்தலைவர் ரொபேர்ட் ஸொயல்லிக் வலியுறுத்தினார். (அ-5)

# இராணுவத்தில் இருந்து விலகிய 600 பேருக்கு போக்குவரத்துச் சேவையில் நியமனம்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து சட்டரீதியாக விலகிய 600பேரை பொது போக்குவரத்துச் சேவையின் பாதுகாப்பிற்கு என விரைவில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் தர்சன ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக போக்குவரத்துச் சபைக்கு 440பேரும் புகையிரத திணைக்களத்திற்கு 150 பேரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முதல் குழுவிற்கான நியமனக் கடிதங்கள் இம் மாதம் 15ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளன.

அவசரகாலச் செயற்பாடுகள் தொடர்பான அனுபவம் கொண்டவர்கள் பயணிகளின் பாதுகாப் பிற்கு என இருக்க வேண்டும் என்பதால் இவர்களை பொது போக்குவரத்துச் சேவையின் பாதுகாப்பிற்கு என நியமிக்க தீர்மானித்திருப்பதாகவும் கேணல் தர்சன ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வெடிபொருட்களை அடையாளம் காணக்கூடிய நவீன இலத்திரனியல் உபகரணங்கள் போக்குவரத்து அமைச்சினால் வழங்கப்படவுள்ளன. (அ-5)

# பேருந்துகளின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்யுமாறு பரிந்துரை

(கொழும்பு)

குண்டு வெடிப்பு அச்சுறுத்தல்களுக்கு இலக்காகும் தனியார் பேருந்துகளின் இலக்க வழிப்பதை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்தின் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் பாதுகாப்புச் சபையிடம் பரிந்துரைக்க வுள்ளனர் என்று தெரியவருகிறது.

பெரும்பாலான பேருந்து களின் நடத்துநர்கள் எந்தவித சோதனைகளையும் மேற்கொள்ளாது விடுவதாக பயணிகளிடம் இருந்து தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொர்பாக ஆராய்ந்த பின்னரே இந்தப் பரிந்துரை முன்வைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பேருந்து உரிமையாளர்கள் எந்தவித அனுபவமும் அற்ற இளைஞர்களை பேருந்து நடத்துநகர்களாக இணைத்து எந்தவித பரிசோதனைகளும் செய்யாது விடுவதற்கு இடமளித்திருப்பது தமது இலக்குகளை எட்டுவோருக்கு வெற்றிகரமாக வழிவகுத்துள்ளது என்று பாதுகாப்புத்துறை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் பேருந்தின் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்கள் என்பதாலேயே குண்டு அச்சுறுத்தல்களுக்கு இலக்காகும் பேருந்துகளின் இலக்க வழிப் பாதை அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைக்க அதி காரிகள் தீர் மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


## கல்வி அமைச்சுக்கு புதிய மேலதிக செயலாளர் நியமனம்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக கே.முகமட் தம்பி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I பிரிவைச்சேர்ந்த இவர் கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சி மற்றும் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கான பிரதம ஆணையாளர் பதவி உட்பட கல்வித்துறையில் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

ஆறாம் திருவிழா

### கண் ஆயிரம் வேண்டுமடி

நயினையம்பதி உறை நாகபூஷணியே -அம்மா
நாகதம்பிரான் குடை பிடிக்க
நாதஸ்வரம் தவில் ஒலிகள் முழுங்கிடவே
பட்டாடையும் பஞ்சவர்ணமுமாய்
பவனி வரும் உன் அழகைக் காண
கண் ஆயிரம் வேண்டும்மா தாயே...

*இ. பிரதீப் -நல்லூர்.*

### அருள் தாராயோ!

அழகு நகை கொஞ்சும் அருள் தேவியே
ஆதி சிவனின் அருமை நாயகியே
நாகமதை குடையாக கொண்டவளே
நம்மவர் படும்துன்பத்தை அறியாயோ
எமக்கிங்கு வந்து அருள் தாராயோ!

*க. பபிதாராகா -கொக்குவில்.*

### அருள் சொரியும் அன்னை

அம்மா தாயே தாயே அம்மா
அன்பாக கேட்போர்க்கெல்லாம்
அள்ளி அருள் சொரியும் அன்னையே
அடியவர்களுக்கெல்லாம் அள்ளி நிதம்
அமுது வழங்கும் அற்புத அமுத சுரபியே
அலை கடல் கடந்து வருவாயோ
அம்மா எம் கவலைகள் நீக்க

*பி. சஜீத் -கொக்குவில்.*

### எம்மைக் காத்தருளும் தேவியே

நயினைத் தாயே- நாகபூஷணியே
உன்னை வணங்குகிறேன்-தேவியே
கடைக்கண்பாரம்மா
நலங்கள் பலவற்றை எமக்களித்தாய்
நம்பியே உன்னை சரணடைந்தோம்
அலைகடல் மத்தியிலே வீற்றிருந்து
அணைத்திடம்மா எம்தாயே
உன்னை மண்டியிட்டே வணங்குகிறேன்
வந்திடம்மா எமைக் காத்தருளும் தேவியே

*சி. லலிதா -பொலிகையூர்.*

### வணங்குகின்றேன் தெண்டனிட்டு

வேதத்தின் முப்பொருளாம் வேழமுருகன்
அன்னையினை
பாகத்தே வைத்தே பரமசிவன் பூரித்தான்
நாகத்தின் படநிழலில் லிங்கத்தை அணைத்திட்டே
பூரித்தாய் தாயே! வணங்குகிறேன் தெண்டனிட்டே

*கவிமணி கந்த முருகேசதாசனார்.*

### நம் கவலை தீருமம்மா

விழிமூடி நாம் தூங்கி வெகு நாட்கள் ஆனதம்மா
வழியென்றும் தெரியவில்லை விடை சொல்லு காளியம்மா
துயரெம்மை சொந்தமாய் தத்தெடுத்துக் கொண்டதுவோ
துயரறுத்து தூயகாளி கரத்திடம்மா எமையெல்லாம்
வினையென்ன நாம் செய்தோம் விடையது தெரியவில்லை
துணையெனவே நீயிருந்தால் துயரங்கள் எமக்கில்லை
நயினையிலே அமர்ந்தவளே நலமருளும் தேவியம்மா
நலம் தந்து காக்கவேணும் நம் கவலை தீருமம்மா

*கி. அ. தில்லைதாசன் -பொலிகண்டி.*



நயினையில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் நாக பூஷணியின் உயர் திருவிழா நாட்டில் நிம்மதியான வாழ்வை தோற்றுவிக்கும்

கிருஷ்ணா நகை மாளிகை

இல-09 ,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம் :-

கிருஷ்ணா அடகுக்கடை

இல-370,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்வில் மனிதனை மகிழ்ச்சிக்கு அருகாமையில் அழைத்துச் செல்பவை சமாதானம், சுதந்திரம்,மன அமைதி.

-இந்தியா

வலம்புரி

# மக்களுக்கு அதிர்ச்சிதரும் ஜனாதிபதியின் அறிவிப்பு

சர்வதேசத்தின் எந்த அழுத்தத்திற்கும் இடம் கொடாது படை நடவடிக்கை தொடருமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது நாட்டு மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் தோற்றிவித்துள்ளது.

முன்னதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க யுத்தம் தொடரும் என அறிவித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி ஆட்சியில் பிரதமர் பியோன் என முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ கூறியிருந்ததையும், அதனை மகிந்த ராஜபக்ஷ வழிமொழிந்ததையும் மையமாக வைத்துக் கொண்டு பிரதமர் கூறிய 'யுத்தம்' தொடரும் என்ற செய்திக்கு மக்கள் முன்னுரிமை அளிக்கவில்லை.

ஆனால் இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியே படை நடவடிக்கை தொடருமென திருவாய் மலர்ந்திருப்பது பேரதிர்ச்சிக்குரியதே.

நேற்றைய தினம் இப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமாதான முயற்சியை முன்னெடுப்பதாகக் கூறி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் பின்னர், சமாதானத்தை மறந்து நாட்டை யுத்தத்தின் பிடிக்குள் அகப்படுத்தியது பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த அம்மையார் இப்போது அரசியல் துறவறம் பூணும் அளவுக்கும்,பெற்ற தந்தை, தாய் உருவாக்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலக்கப்படும் பரிதாப நிலைக்கும் ஆளாகியுள்ளார்.

அரசியலில் அதியுயர் பதவி வகித்த ஒருவருக்கு இப்படியானதொரு அவலநிலை எப்போதும், எக்காலத்திலும் ஏற்படக் கூடாது.

ஆனாலும் அந்த அவலநிலை அம்மையாருக்கு ஏற்பட்டு விட்டது.

இதே பரிதாப நிலை இலங்கையின் முன்னைய தலைமைகளுக்கும் ஏற்பட்டிருந்ததைக் காணமுடியும்.

இவ்விதம் இலங்கை அரசியலில் கொடி கட்டிப் பறந்தவர்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போனமைக்கான காரணம் என்னவென ஆராய்ந்தால், அவர்கள் யுத்தம் நடத்தி மனித உயிர்கள் பலியாகிப் போகவும், அதன் நிமிர்த்தம் கண்ணீரும், கம்பலையுமாக உறவுகள் மனம் நொந்ததுமே எனலாம்.

எனவே இலங்கைத் திருநாட்டில் எவரேனும் மக்கள் மனங்களில் நீடூழி வாழ வேண்டுமாயின் அவர்கள் சமாதானத்துக்காகப் பாடுபடுபவர்களாகவும் –சமாதானத்தை நிலைநாட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

இதை விடுத்து யுத்தத்தை நடத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்தவேண்டுமென எவரேனும் விரும்புவார்களாயின் அது நடைமுறைக்கு பொருத்துடையதாகதென்பதுடன் அத்தகைய நினைப்பும், செயற்பாடும் மனிதப் பேரவலங்களையே ஏற்படுத்தும்.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது, முடிபை மாற்றி சமாதானத்தை நிலைநாட்ட பாடுபடவேண்டுமென்பது பொதுமக்களின் வேண்டுதலாகும்.

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்பட மாட்டாது

## பேராசிரியர் திஸ்ஸவித்தாரண

(கொழும்பு)


பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்ற அச்சம் தேவையற்றது என சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டமூலம் முழுமையாக அமுல்படுத்தப்படும்.ஒரு நாட்டுக்குள் சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறினார்.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பகிந்தளிக்கப்படுமென தேவையின்றி அச்சமடையத்தேவையில்லை மூவர் அடங்கிய சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவில் ஒருவர் அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த முதலமைச்சர்களால் நியமிக்கப்படுவார்.

ஏனைய இருவரும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள் என அமைச்சர் குறிப்பிட்டார்.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறைக்கப்படும். சர்வகட்சி பிரதிநிதிகள் குழு இதுவரை 76 கூட்டங்களை நடத்தியுள்ளது. தமிழ் மக்க்ள் விடுதலைப்புலிகள் தமது



பிரதிநிதியை நியமிப்பதற்கு காத்திருக்கின்றோம் என அமைச்சா திஸ்ஸ வித்தாரண மேலும் தெரிவித்தார்.

(அ-5)

# பருநிலைப் பொருளியல் (பேரினப் பொருளியல்)

## ஓர் விமர்சனப் பார்வை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் எஸ்.விஜயகுமாரால் எழுதப்பட்ட 'பருநிலைப் பொருளியல் கோட்பாடுகளும் கொள்கைகளும் என்ற நூல் வெளிவருவதையிட்டு சக விரிவுரையாளர் என்ற ரீதியிலும் பொருளியல் துறை தலைவர் என்ற ரீதியிலும் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.



கடந்த ஆண்டுகளாக இப் பல்கலைக் கழகத்தில் பொருளியல் பாடத்தில் உள்ள பல பிரிவுகளை இந் நூலாசிரியர் கற்பித்து வருகின்றார். மைசூர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் M.A. பட்டத்தினையும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் M.Phil பட்டத்தினையும் பெற்றுள்ளார். கற்பித்தல் அனுபவம் வெளிநாட்டில் கற்ற அனுபவம் இயல்பாகவே ஆசிரியரிடம் அமைந்துள்ள ஆற்றல் ஈடுபாடு என்பன காரணமாக இந்நூலைச் சிறந்த முறையில் உருவாக்கி உள்ளார்.

இலங்கையில் தமிழ்மொழி மூலம் பல்கலைக்கழகக் கல்விப்போதனை ஆரம்பித்து ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளாகின்ற நிலையிலும் கூட பொருளியல் பாடத்தை பொறுத்த வரையில் தமிழில் போதியளவு மூல நூல்கள் வெளிவரவில்லை. ஜோன் மேனாட் கெயின்ஸ் என்பவருடைய பொதுக்கொள்கை என்ற நூல் வெளிவந்த பின்னரையே பருநிலைப் பொருளியல் என்ற பிரிவு பொருளியல் பாடத்தில் அதிக முக்கியத்துவம் உடையதாக உருவாகியது. கெயின்ஸின் பின்னர் பருநிலைப் பொருளியலின் பாடப் பரப்பும் விரிவடைந்துள்ளது. பரு நிலைப் பொருளியலில் சில முக்கிய பகுதிகளை இந்நூலாசிரியர் தமிழில் தந்துள்ளார்.

தமிழில் பயிலும் உள்வாரி பல் கலைக் கழக மாணவர்களுக்கும் வெளிவாரி மாணவர்களுக்கும் பருநிலைப் பொருளியலின் முக்கிய பகுதிகள் சிலவற்றை தெளிவாக விளக்குவதில் இந்நூல் மிகுந்த உதவியினை செய்யும் எனத் துணிந்து கூறலாம்.


'பருநிலைப் பொருளியல் கொள்ளைகளும் கோட்பாடும்' என்ற இந்நூல் ஏழு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதலாம் அத்தியாயம் பொருளாதார ஆய்வு முறைகள் என்பதாகும். இவ்வத்தியாயம் சிற்றினப்பொருளியல், பருநிலைப் பொருளியல் என்பவற்றிக்கிடையேயான வேறுபாடுகள் அவற்றின் நன்மை தீமைகள், பருநிலைப் பொருளியலின் நோக்கங்கள் பற்றி விளக்கமாகக் கூறுகின்றது. இரண்டாம் அத்தியாயம் தேசிய வருமானக்கணக்கு பற்றியும் வருமான வட்டப் பாய்ச்சல் பற்றியும் கூறுகின்றது.

இவ்வத்தியாயத்தில் தேசிய வருமானத்தைக் கணிக்கும் முறைகள் அதனைக் கணிப்பதில் உள்ள பிரச்சினைகள் அதன் உபயோகங்கள் பற்றியும் ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளனர்.

அத்துடன் வருமான வட்டப்பாய்ச்சல் பற்றிய ஆரம்பவிளக்கங்களும்ஒழுங்கான முறையில் இவ்வத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. மூன்றாம் அத்தியாயத்தில் சேயின் சந்தை விதியினை அடிப்படையாகக் கொண்ட பழம்பொருளியலாளர்களின் வேலைவாய்ப்புக்கோட்பாட்டினை விரிவான முறையில் ஆசிரியர் விளக்கியுள்ளார். நான்காம் அத்தியாயம் வேலையின்மைக்கும் தேசிய வருமான் மட்டத்திற்கும் இடையேயான தொடர்புகளை எடுத்துக் கூறுகின்றன ஐந்தாம் அத்தியாயம் கெயின்சினுடைய நுகர்வுக்கோட்பாடு பற்றியதாகும் இதில் நுகர்வு நாட்டம், நுகர்வு நாட்டத் தைப் பாதிக்கும் காரணிகள் கெயின்சியின் நுகர்வுக் கோட்பாட்டில் உள்ள குறைபாடுகள் விளக்கப்பட்டுள்ளன ஆறாம் அத்தியாயம் பெருக்கிக் கோட்பாடு பற்றிக் கூறுகிறது.

பல்வேறு வகையான பெருக்கி வாய்ப்பாடுகளை பெறும் முறைகள் விரிவான முறையில் இவ் வத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும் ஏழாம் அத்தியாயம் கெயின்சுக்குப் பின்னர் வந்த பொருளியலாளர்களால் விளக்கப்பட்ட IS-LM வளை கோட்டு விளக்கங்களை சிறப்பான முறையில் எடுத்தியம்புகிறது. இந்த வகையில் பரு நிலைப் பொருளியல் பற்றி இலங்கையில் தமிழில் வெளிவரும் முக்கியமான நூலாக இந்நூல் அமைகிறது.

தேவையான இடத்து வரைபடங்களையும் எண் கணித உதாரணங்களையும் உதவியாகக் கொண்டு சிக்கலான கோட்பாடுகளையும் இலகுவான முறையில் ஆசிரியர் விளக்கி உள் ளார் சந்தை வாய்ப்புக்கள் பல தடைப் பட்டுள்ள இக் காலத்தில் இந் நுலைத் துணிந்து வெளியிடுவதற்கு முன் வந்த




நூலாசிரியர் பெரிதும் பாராட்டுக்குரியவர் ஆவார். பிறமொழியில் உள்ள சமுக விஞ்ஞானக் கருத்துக்களை தமிழில் வெளிக்கொணர முனைந்த தன் மூலம் தமிழன்னைக்கு இந் நூலாசிரியர் பெருமைசேர்த்துள்ளார்

**நல்லதம்பி பேரின்பநாதன்**
தலைவர்
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
இலங்கை.

உள்வாரி பட்டதாரி மாணவர் களுக்கும் வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக இந்நூல் அமைந்துள்ளது என்று கூறுனால் மிகையாகாது.

ஓலைச் சுவடிகள் 39

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## குழந்தைகளுக்கு கண்ணாடி காண்பிக்கலாமா?

குழந்தைகளுக்கு முகம் பார்க்கும் கண்ணாடியைக் காண்பிக்க் கூடாது என்று முதியோர்கள் கூறுவதுண்டு.

கண்ணாடியில் தன் சுய பிரதிபிம்பத்தைக் காணும் குழந்தை விஷயங்கள் புரிந்து கொள்ளும் இயல்புள்ளதனால் மிக மகிழ்ச்சியடையும் என்பதில் சந்தேகமில்லை ஒரு நண்பன் வந்துவிட்டதாகக் கருதி சொந்த பிரதிபிம்பத்தை அதிசயத்துடன் பார்க்கும் குழந்தைகளும் உண்டு.

குழந்தைகள் கண்ணாடி பார்த்தால் சுயரூபத்தில் நாட்டம் கொண்டு அதில் மட்டும் ஆர்வம் கொண்டிருக்கும் என்பதால் குழந்தைகளை கண்ணாடிக்கு முன் அதிக நேரம் செலவழிப்பதைத் தவிர்க்கத்தான் சிறுவயதிலே இதைக்கட்டுப்படுத்த நினைப்பது என்று சில பெற்றோர்கள் கருதுகின்ற னர். அழகில் குறைவுள்ள குழந்தைகள் கண்ணாடியில் தம் உருவத்தைக் கண்டு மனக்குழப்பமடைய நேரிடும் என்றும் கருதுகின்றனர்.

ஆனால் மிகப் பெரியமூடநம்பிக்கை ஒன்று இதில் பரவி வந்தது. என்ன வென்றால் கண்ணாடியில் குழந்தைகள் தம் சுய உருவத்தைக் காண்பதில்லை என்றும் பிசாசுகளையே காண்கின்றனர். என்றும் உள்ள கருத்து கண்ணாடியில் தோன்றும் பிசாசுகள் ஆக்கிரமிக்க முயல்வது குழந்தைகள் காண்கின்றன என்றும் குழந்தை அழுவது இதனால் என்றும் சிலர் நம்புகின்றனர். ஆனால் கண்ணாடியில் பார்க்கும் போது சில நேரம் சூரிய ஒளி பிரதிபலிக்க வாய்ப் புண்டு என்றும் அது குழந்தையின் கண்ணில் தட்டி ரெடினா சேதமடையலாம் என்பதனால் குழந்தைகளைக் கண்ணாடிக்கு முன் காண்பித்தல் ஆபத்து கவனமில்லாமல் கண்ணாடியைப் பயன்படுத் தினால் நண்பகல் நேரமானால் கண்ணா டியில் பிரதிபலித்து வரும் சூரிய ஒளிநேரடியாக சூரியனைப் பார்க்கும் போதுள்ள அதே தீவிரத்துடன் கண்களுக்குள் நுழையும் கைகால் உதறி அழும் குழந்தையின் கண்ணாடிப் பிரதிபலிப்பும் அவ்வாறே இருக்கும் இது வேறு நபர் என்று எண்ணி குழந்தை பயப்படும் என்றும் கூறப்படுகின்றது.

# சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது

(கொழும்பு)

சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கும் சாட்சியாளர் ஒருவர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு அப்பால் எந்தப் பகுதியிலிருந்தாலும் ஒலி மற்றும் வீடியோ முறை மூலம் சாட்சியம் அளிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பான சட்டத்தைப் பலப்படுத்தும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கும் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதுடன் இந்த வருட ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கையிடம் விடுத்த வேண்டுகோளும் இந்தச் சட்ட மூலத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் மற்றும் சாட்சியங்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச சட்டங்களை இலங்கையிலும் கடைப்பிடிக்கும் நோக்கில் இந்தச் சட்ட மூலம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் சட்ட மூலம் தொடர்பான விவாதம் இந்த மாதம் இடம்பெறவுள்ளது.

குற்றவாளிகள் மற்றும் சாட்சியங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேசிய அதிகார சபை ஒன்றை உருவாக்குவது பற்றியும் இந்தச் சட்டப் பிரேரணையில் முன்மொழியப்பட்டுள்ளன.

குற்றவாளிகளுக்குத் தண்டனைப் பணம் அறவிடுதல் போன்றவை குறித்த செயற்பாடுகளை இந்த அதிகார சபை மேற்கொள்ளும். இந்தப் பிரேரணைக்கு அமைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் தலைமையில் குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களுக்கான உதவி மற்றும் அவர்களைப் பாதுகாக்கும் பிரிவொன்றை நிறுவுமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியாளருக்கு அச்சுறுத்தல், பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கான தற்காலிக தங்குமிட வசதிகள், பாதுகாப்பு, பாதுகாப்பு நிறைந்த புதிய தங்குமிடம், தற்காலிக அல்லது நிரந்தர வேலை வாய்ப்பு, புதிய அடையாளம் போன்றன வழங்குவதற்கும் இந்தப் பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய சட்டத்திற்கு அமைய உதவி மற்றும் பாதுகாப்பு நிதியம் ஒன்றும் அமைக்கப்பட்டு அதனூடாக சாட்சியாளர் அல்லது குற்றச் செயலால் பாதிக்கப்பட்ட ஒருவருக்குப் பொருள் சேதம் அல்லது உடல் ரீதியான பாதிப்பு ஏற்படும்போது அதனை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் உதவிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சட்ட மூலம் அவசரமாக நிறை வேற்றப்பட வேண்டும் எனக் கூறி சட்டத்தின் சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு மகிந்த ராஜபக்ஷ, அதனை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருந்தார். அரசியலமைப்புக்கு அமைய சில மாற்றங்களை மேற்கொண்டிருந்த உயர் நீதிமன்றம் அந்தச் சட்டத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தது. இந்தச் சட்டப் பிரேரணை தற்பொழுது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## விறகு வெட்டச் சென்ற பொதுமக்கள் மீது சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேச காட்டில் விறகு வெட்டச் சென்றிருந்தவர்கள் மீது சீருடையணிந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச வாசிகள் 12 பேர் உழவு இயந்திரம் ஒன்றில் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்திற்கு அறிவித்துவிட்டு குறித்த காட்டுப் பகுதிக்குத் தாங்கள் விறகு வெட்டச் சென்றிருந்தபோது அங்கு எதிர்கொண்ட சீருடை தரித்த இருவர் தங்களை அழைத்ததாகவும் தாங்கள் அங்கு சென்றபோது தங்கள் மீது துப்பாக்கிச் பிரயோகம் மேற்கொள்ள முயன்றதாக சம்பவத்தில் தப்பிய ஏனையோர் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்த தகவல்களை இன்று செய்தியாளர்களிடம் தெரிவிப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அரச எதிர்ப்பு மாதமாக ஜே.வி.பி. பிரகடனம்

(கொழும்பு)

ஜே.வி.பி. இம் மாதத்தை அரச எதிர்ப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதன்படி அரசாங்க மற்றும் தனியார்துறை ஊழியர்களை இணைத்து இந்த மாதம் முழுவதும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வடக்கு மக்கள் தெற்குக்குச் செல்ல...

நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கத்தின் செயற்பாடுகளும் நிர்வாக ஒழுங்குகளும் சீரில்லாத காரணத்தினால் பொது மக்கள் அசாதாரண நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அத்துடன் நாட்டைப் பாதுகாக்கும் விடயத்தில் அரசாங்கத்திடம் தெளிவான விதிமுறைகளும் இல்லை. அடிப்படைகளும் இல்லை. மதவாச்சியூடான போக்குவரத்தைத் தடை செய்வதன் மூலமோ அல்லது பயணிகளின் சுதந்திரமான போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதன் மூலமோ பயங்கரவாதத்திடமிருந்து நாட்டைக் காக்க முடியாது.

இது ஒரு பாரதூரமான பிரச்சினையாகும். இவ்வாறான செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. எனவே நாட்டைப் பாதுகாக்கவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் மக்கள் நிம்மதியான சமாதானத்தில் வாழவும் வேண்டுமானால் யுத்த முனைத் தீர்வு என்ற பிடிவாதம் எவ்வகையிலும் நியாயமற்றது , நாகரிகமற்ற வீண்வாதமாகும்.

இதனைவிடுத்து பொதுமக்கள் இம்சைப் படுத்தப்படும் பிழையான நடவடிக்கைகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. சுரேஸ் பிரேமச்சந்திரன்,

தமிழ் மக்கள் மீதான பேரினவாத அரசாங்கத்தின் கெடுபிடிகள் நீடித்துச் செல்கின்றன. வடக்கிலிருந்து தமிழர்களின் தெற்குப் பயணத்தை அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சும் முடக்கி வருகின்றன.

தமிழ் மக்கள் தென்பகுதிக்கு வரக் கூடாது என்பதில் முனைப்புக் காட்டுகின்ற அரசாங்கம் வடக்குக் கிழக்கில் குவித்து வைத்திருக்கும் படையினரை விலக்கிக் கொள்வதுடன் வடக்கையும் கிழக்கையும் தமிழ் மக்களிடம் ஒப்படைத்து விட்டால் தமிழ் மக்களின் தென் பகுதி விஜயத்திற்கு அவசியம் ஏற்படாது.

எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் வடக்கும் கிழக்கும் தமிழருக்குச் சொந்தமாவதை விட வேறு வழியில்லை என்றார். (எ -5)

## விமல்...

இணைந்து ஜே.வி.பி. உறுப்பினர்கள் விமல் வீரவன்சவை கடுமையாகச் சாடியுள்ளனர் தமது நாடாளுமன்ற வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி சிலுமின செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் ஜே.வி.பியின் மிக முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் மிகக் கடுமையான வார்த்தைகளால் விமல் வீரவன்சவைத் திட்டியதாகக் குறிப்பிடப்படுகின்றது.(ச-5)

## போதியளவு நிதி வசதிகள்...

வதால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்க முடியாதுள்ளது. அவர்களுக்கு உதவிகளை வழங்க வேண்டுமாயின் எமக்கு உடனடியாக 2 இலட்சம் அமெரிக்க டொலர் முதல் 2.5 இலட்சம் அமெரிக்க டொலர் வரையான நிதியுதவி அவசியம்.

அதிகரித்திருக்கும் பொருள்களின் விலை எமது அமைப்புக்கு பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளது என அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கூறினார்.

உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து குறைந்தளவு உதவியைப் பெற்றுக் கொண்டபோதும் தமது அமைப்பைக் கொண்டு நடத்துவதற்கு அது போதுமானதாக இல்லை.

எமது பணிகளைத் தொடர்வதற்கு மேலும் உதவிகள் தேவைப் படுகின்றன என்றார் அவர். புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் போதியளவு நிதியுதவி இல்லை எனவும் உதவிகளை வழங்குமாறும் கடந்த சில மாதங்களாக நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

இதனால், திடீரென நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு போதியளவு உணவுப் பொருள்கள் இல்லையென உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

எமது சத்துணவுத் திட்டத்தை முன்னெடுக்காமல் மேலும் இரண்டு இலட்சம் பேருக்கு மாத்திரமே நிவாரணங்களை வழங்கக் கூடிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன.

இதனால் பொதுமக்களுக்கு வழங்கும் உலர் உணவுப் பொருள்களைக் குறைக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் என உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜேன் வைவ்ஸ் அந்த ஊடகத்திடம் குறிப்பிட்டார். (ச-5)

## நாட்டைப் பாதுகாப்பதற்...

பதற்கு நான்கு பாதுகாப்புக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். அரச துறையினரைப் பாதுகாப்பதற்கு ஒரு குழுவும் தனியார் துறையினரைப் பாதுகாப்பதற்கு மற்றுமொரு குழுவும் பொதுப் போக்குவரத் துக்களைப் பாதுகாப்பதற்கு பிறிதொரு குழுவும் பாடசாலைகள் மற்றும் மாணவர்களைப் பாதுகாப்பதற்கு மற்றுமொரு குழுவும் நியமிக் கப்பட வேண்டும் என நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விமல் வீரவன்ச கூறினார்.

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் அதேசமயம் வடக்கை முழுமையாகக் கைப்பற்றும் நடவடிக்கைகளும் ஓய்வின்றி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். பாதுகாப்புத் தரப்பினரின் மனோ தைரியம் குன்றுவதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய சுதந்திர முன்னணியின் செயலாளர் நந்தன குணதிலக்கவும் கலந்து கொண்டிருந்தார்.

இதேவேளை நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் இன்று உயர் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தைக் கூட்டி ஆராயவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## கொழும்புப் பயணங்க...

கிலிருந்து வருகை தரும் தமிழர்களுக்கான பாதுகாப்பை எங்களால் உத்தரவாதப்படுத்த முடியாது. எனவே மறு அறிவித்தல் வரை கொழும்புக்குப் பயணம் செய்வதை வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தவிர்த்துக் கொள்வது மிகவும் உசிதமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து பல தமிழர்கள் கைது செய்யப்படுவதுடன் சிலர் காணாமல் போகின்றனர். கடத்தல்கள் மற்றும் கைது செய்தல்களுக்கு இடையிலான வேறுபாட்டை சுட்டிக் காட்டுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பல தாய்மார்களின் அவலக் குரல்களை எமது காரியாலயத்தில் தினந்தோறும் கேட்க வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மொறட்டுவ மற்றும் கண்டியில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட் டோரது குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரண்டு தரப்பினருக்குமிடையிலான அதிகாரப் போராட்டத்தின் பாதகமான விளைவே இந்தக் குண்டு வெடிப்புக்கள். கொழும்பு மற்றும் வன்னியில் மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஓர் சங்கிலித் தொடராக அமைந் துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் இடம்பெறும் குண்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாகத் தெற்கிலும் தெற்கில் இடம்பெறும் தாக்குதலுக்குப் பதிலடியாக வன்னியிலும் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இந்த நிலைமையினால் பெரிதும் அப்பாவிப் பொது மக்களே பாதிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

## யாழ்ப்பாணத்தில் மீன்பிடித்...

இந்த நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்,

சில குடும்பங்கள் தொழில் இல்லாத காரணத்தினால் ஒருநேரக் கஞ்சிக்குக் கூட வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்.

யாழ்.குடாக் கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர். வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்கள் கட்டுமரத்தில் மாத்திரமே கடலில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதுடன் அடிக்கடி அவர்கள் கடலுக்குச் செல்வது தடுக்கப்படுகின்றது என அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக தமிழோசையிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீனவர்கள் ஏராளமான கஷ்டங்களை சந்தித்து வருவதாகவும் ஆனால் யுத்த சூழ்நிலை என்று ஒன்று நிலவி வரும் போது இதுபோன்ற பிரச்சினைகளும் நிலவும் என்று கூறினார்.

எனினும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தை மேம்படுத்துவது தொடர்பாகத் தாங்கள் ஆலோசித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ-5)


### வடமராட்சியில் தொழிற் பயிற்சி நெறிகள்

### யாழ்.தொழில்நுட்பக் கல்வி மையம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 14.06.2008, 19.06.2008

01. கொம்பியூட்டர் காட்வெயார் . (03 மாதம்)
02. மின் தொழில் நுட்பம் (Electrical) (06 மாதம்)
Single Phase Three phase
மோட்டார் ரீவயிண்டிங் (02 மாதம்)
03. குளிர்சாதன இயந்திரங்கள் Refrigeration and Air Conditioning
திருத்தும் பயிற்சி
Frige (02மாதம்) A.C. (03மாதம்)
04. மோட்டார் வாகன பொறியியல்
மோட்டார் சைக்கிள்,நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை
மோட்டார்சைக்கிள் (04 மாதம்), நீர் இறைக்கும் இயந்திரம் (02 மாதம்)
05. வாகனங்களுக்கான மின் இணைப்பு (03 மாதம்)
வாகனப் பெயின்டிங் பயிற்சி
06. றேடியோ, T.V., C.D.
மொனிற்றர், U.P.S. பயிற்சி நெறி
Radio (02 மாதம்) T.V. (03 மாதம்)
C.D. (02 மாதம்) மொனிற்றர், U.P.S.(02 மாதம்)
07.வெல்டிங் - Gas Air welding (04 மாதம்)

சகல பயிற்சி நெறிகளுக்கும் ஆரம்ப மின் இலத்திரனியல் வகுப்புக்கள் இலவசம்

சனி, ஞாயிறு வகுப்புக்களும் நடைபெறும். தொழில் செய்வோருக்கான பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறும்.

யாழ்.தொழில் நுட்பக் கல்வி மையம்,
சிலையடி மந்திகை , புலோலி,
(சிறீபத்மநாதன் கட்டிடம்)

T.P. No.:- 077 9152617

(331)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.